www.akaram.eu

AKARAM

# அகரம்

இலவச தமிழ் மாத இதழ்

சுவடி : 11.02 திருவள்ளுவர் ஆண்டு 2055

14.12.2023 13.01.2024

ISSN : 2195-6480



FREE Magazine

## விஜயகாந்த்

நிரப்பமுடியாத வெற்றிடம்

## ரணிலின் வடக்கு விஜயத்தின் தார்ப்பரியம்

## கறுப்புக் கோட்டுகளும் திருடர்கள் கூட்டமும்!

13 ஆம் ஆண்டில் அகரம்

FREE CIRCULATION : GERMANY, SWITZERLAND, FRANCE, ENGLAND, DENMARK, NORWAY, HOLLAND, SWEDEN, ITALY, CANADA


ADS BEST FOODS
Branded Masala
Canned Foods
Rice
Fresh Vegetables
Fresh Sea Foods
Green Vegetables
உங்கள் இல்லங்களுக்குத்
தேவையான அனைத்து
அத்தியாவசியப் பொருட்களும்
இப்போது ஒரே இடத்தில்
வாடிக்கையாளர்
அனைவருக்கும்
தமிழர் திருநாள்
நல்வாழ்த்துகள்
உங்கள் வீட்டில் இருந்தே
பாதுகாப்பான முறையில்
மளிகைப் பொருட்களை பெற
எமது Whatsapp
0176 45956273
இலக்கத்திற்கு
தொடர்பு ஏற்படுத்துங்கள்
Safe Fast Reliable
ADS BEST FOODS
Rheinische str 79-81
44137 Dortmund
Tel : 0231 95046883
Whatsup : 017645956273



இன்பம் பொங்கும்
தமிழர் திருநாள்
நல்வாழ்த்துகள்

ortel MOBILE




# Internet L +

60GB

✓ Internet flat rate 60GB high speed

✓ EU roming included

Now for 4weeks for "

**32,49€***

** Applies to Intemet L+booking with automatic renewal




# Smart World L +

✓ 400min. from Germany to the EU & 38 Countries

✓ Internet flat rate 24GB high speed

✓ Unlimited national minutes

Now for 4weeks for "

**22,49€***

SMART WORLD L+

## 20 GB Highspeed

**400 minutes to the EU & 38 more Countries**

✓ 400 minutes from Germany to EU and 38 Other desinations.

✓ Internet Flat Highspeed up to 20GB

✓ Unlimited national minutes

Now for 4weeks for "

**22,49€***

SMART WORLD X+

## 36 GB Highspeed

**500 minutes to the EU & 38 more Countries**

✓ 500 minutes from Germany to EU and 38 Other desinations.

✓ Internet Flat 36 GB Highspeed

✓ Unlimited national minutes

Now for 4weeks for "

**27,49€***

INTERNET S+

## Internet S+

**Internet Flat**

✓ Internet flat rate 11GB high speed

✓ EU roaming inclued

Now for 4weeks for "

**12,49€***







## Buy Wi-Fi router online

✓ Simple setup
✓ Receive SIM card without credit
✓ Book additional data at any time
✓ No contractual obligation or credit check

**39,99€***



AKARAM
அகரம்

மாதாந்த இதழ் Monthly Magazine

14 மார்கழி 2024 - 13 தை 2024
சுவடி / ISSUE 11.02

**தலைமை ஆசிரியர்**
திரு. **த. இரவீந்திரன்**

**உதவி ஆசிரியர்**
திரு. **வன்னித்தம்பி**

**ஆசிரியர் குழு**
திரு. பவித்திரன் (இலங்கை)
திரு. தயாபரன் (இலங்கை)
திரு. எதிர்மன்ன சிங்கம் (சுவிஸ்)
திரு. சண் தவராஜா (சுவிஸ்)
திரு. அறிவழகன் (ஜெர்மனி)
திரு. கண்ணன் (இந்தியா)

**நிழற்படப் பிரிவு**
திரு. வியாசன்
செல்வி. கயல்விழி

**ஒப்பு நோக்குனர்**
திரு. அர்ஜுன் (ஜெர்மனி)

**தொடர்புகளுக்கு**

European Tamils Union e.V.
PO. Box 13 06 31,
44316 Dortmund,
Germany

Tel: 00 49 176 47 11 87 11
Email: editor@akaram.eu

ISSN 2195-6480

www.akaram.eu

No part of this publication may be reproduced, copied or transited in any form or by any means or stored in any information storage or retrieval system without the publisher's written permission.

©ETU e.V. 2014.
All rights reserved.

# நுழைவாயில்...

**அகரம் வாசக அன்பர்களுக்கும், விளம்பர தார வள்ளல் பெருமக்களுக்கும் இன்பம் பொங்கும் இனிய தமிழர் திருநாள் நல்வாழ்த்துகள். எல்லாரும் எல்லாமும் நலமாக பெற்று, நலமுடனும், வளமுடனும் வாழ வாழ்த்துகிறது.**

தமிழர் வாழ்வில் அமைதியும், பாதுகாப்பும், சமாதானமும் கிடைக்கும் சாத்தியப்பாடுகள் மேலும் குறைந்தே காணப்படுகிறது. தமிழ்த் தேசியப் போராட்டத்தை முற்றாக அழித்துவிடும் முயற்சியில், எம் இனத்தின் எதிரிகளும், துரோகிகளும் மிகத்தீவிரமாகச் தொடர்ந்தும் செயற்பட்டு வருகிறார்கள்.

இங்கிலாந்தைத் தலைமையகமாகக் கொண்டுள்ள உலகத் தமிழர் பேரவையும், இலங்கைத் தமிழரசுக் கட்சித் தலைமைப் போட்டியாளர் சுமந்திரனும், மிக இரகசியமான முறையில் இலங்கைப் புத்தப் பிக்குகள் சம்மேளனத்தின் புத்தப் பிக்குகளுடன் இணைந்து, 'இமயமலைப் பிரகடனம்' என்றொரு அரசியல் பிரகடனத்தை வெளியிட்டுள்ளார்கள். அந்த இமாலயத் துரோகத்தைத் தமிழினம் எக்காரணத்துக்காவும் மன்னிக்கவோ, மறக்கவோ முடியாது.

மிகப் பெரும் தமிழின அழிப்பைச் செய்தும், அதற்கான நீதியோ, கவலையோ வழங்கப்படாத நிலையில், அங்குள்ள எம்தமிழ் உறவுகள் இராணுவ அடக்கு முறைக்குள்ளும், சர்வ தேசப் போர்க் குற்றம், மனித உரிமை மீறல் குற்றம் மற்றும் தமிழ் இன அழிப்புக் குற்றம் சுமத்தப்பட்டுள்ள இலங்கைச் சிங்கள பௌத்த அரசு பொறுப்புக் கூற, ஐ.நா.மனித உரிமை ஆணைச் சபையின் தீர்மானங்களை 10 வருடங்களுக்கு மேலாக மீறி வருகிறது.

இப்படியான சிங்கள இனவெறி, இலங்கை அரசுக்குப் பாவ மன்னிப்பும், தமிழ் மக்களின் அரசியல் உரிமைப் போரைப் பயங்கரவாதம் என்ற முத்திரை குத்தும் வேலையை, இந்தத் தமிழ் மக்கள் பெயரால் செயற்படும் தமிழ் அரசுக்

கட்சியும், அதன் புலம் பெயர் அமைப்புகளும் செய்து முடித்துள்ளன.

மறுபுறத்தில் இன்னொரு கொள்ளைக் கூட்டம் மேதகு தலைவர் பிரபாகரனின் மகள், தனது தந்தையின் ஆணைக்கு அமைவாக அரசியல் செய்ய வேண்டும். அதற்காக தாமே விரைவில் வரப்போவதாக, தென் இந்தியாவில் திரு. பழ.நெடுமாறனும், கவிஞர் காசி ஆனந்தன் கடந்த சில மாதங்களாக ஆதாரப்படுத்தாத, அநாமதேய தொலைபேசி உரையாடலை ஆதாரம் காட்டி, கட்டி எழுப்பிய கண்ணாடி மாளிகை, மாவீரர் நாளில் பொடிப் பொடியாகியது.

நவீன தொழில் நுட்ப முறையில், ஆள் அடையாளம் தெரியாத காணொளிக் காட்சியைச் சில யூரியூப் பதிவுகள் மூலம், தமிழர் மனங்களையும், வளங்களையும் சிலர் கொள்ளை அடிக்க முயன்ற நிகழ்வையும் தமிழர்கள் பார்த்தார்கள்.

மேதகு தலைவர் எங்கே இருக்கிறார்? மீண்டும் வருவாரா? எப்போ வருவார்? என்கிற கேள்விகள் எம்மைப் போன்றே இலங்கை, இந்திய அரசுகளும் சர்வதேச நாடுகளுக்கும், எமக்கும் தெரிந்தும், தெரியாமலும் தேடிக் கொண்டே இருக்கின்றன.

இப்பொழுது இலங்கை அரசுக்குப் பணம் வேண்டும். *1956* தொடக்கம், தமிழரின் சொத்தை எல்லாம் பறித்து முடித்து விட்டார்கள். இப்பொழுது அவர்கள் கவனம் எல்லாம் புலத்தில் வாழும் தமிழ் மக்களின் சொத்துகள் பற்றியதே!. திருவிழாக் கூட்டத்திலே சங்கிலி அறுக்கும் திருடர்போல, புலிகளின் சொத்துகளைத் திருடும் கூட்டம், புலிகள் அமைப்பின் உள்ள கனவான்கள் சிலர், “பிரபாகரனின் மகள் துவாரகா அரசியல் செய்ய வருகிறார்” என ஆள்மாறாட்ட, திருட்டுக்கு அடித்தளம் போடுகிறது. பல நாடுகளில் புலிகள் இயக்கத்தின் பல்லாயிரம் கோடி பெறுமதியான அசையும், அசையாச் சொத்துகள் *2009* மே தொடக்கம், முன்னாள் மோசடி கிளைப் பொறுப்பாளர்கள் பலரின் கைகளில் சிக்கி உள்ளன.

அதனை முறைப்படுத்த முயன்ற மேதகு தலைவரால் *01.01.2009* தொடக்கம், அதிகாரம் வழங்கப்பட்ட திரு. கே.பி அவர்களை, இந்த மோசடிக் கும்பல் இலங்கை அரசு சிறைப்படுத்த உதவியதால், அவர் இலங்கை அரசின் சிறைக் கைதியாக முடக்கப்பட்டதால், புலிகள் இயக்கம் முழுமையாகச் செயலற்றுப் போய்விட்டது.

இந்தச் சொத்துகள் எல்லாம் தமிழ் மக்களின் உழைப்பால், போராட்ட நிதியாகப் பெறப்பட்டவை. தலைவரிடம் காணப்பட்ட இலட்சியப் பிடிப்பும், நேர்மையும் அணுவளவும் இல்லாதவர்களின் பொறுப்பில், இப் பெரும் சொத்து களவாடப்பட்டு வருகிறது. இவை முழுவதுமாக தமிழ் மக்களின் நலத் திட்டங்களுக்கும், முன்னாள் போராளிகளின் மறு வாழ்வுப் பணிகளுக்கும் பயன்படுத்தப் பட வேண்டியவை.

நாணயமான ஒரு சில மனிதர்களாவது புலிகள் அமைப்பில் இருந்தால், புலிகள் இயக்கத்தின் சொத்துகளைச் சட்டப்படியாக ஒரு நம்பிக்கை நிறுவனத்தை ஏற்படுத்தி, நேர்மையான வழியில் புலிகளின் சொத்துகளை நெறிப்படுத்தி, மோசடிகளுக்கு ஒரு முடிவைக் காண வேண்டும்.

சர்வதேச அளவில் எமது அரசியல் போராட்டத்தை நெறிப்படுத்த, இந்த நம்பிக்கை நிதியம் பெரும் சக்தியாக விளங்கும். அகரம் முன்னரும் தமிழருக்கான வங்கியின் அவசியம் பற்றி பேசி வந்துள்ளது. நாம் மேதகு தலைவரின் முன்மாதிரியைப் பின்பற்றித் துணிச்சலுடன் செயலாற்ற வேண்டும். இனிய தமிழர் திருநாள் வாழ்த்துகளுடன் விடைபெறும்,

**மீண்டும் வரும்வரை,**

**ஆசிரியர், அகரம் குழுமம்**



த. எதிர்மன்னசிங்கம்

# ஈழத்தில் தமிழ் இனப் படுகொலை செய்தவர்கள் உக்கிரெயின் ரஷியா பலஸ்தீனத்தில் நடத்துகிறார்கள்!

இது போன்ற மூஞ்சூறுகளை வைத்துத்தான், ஈழத் தமிழ் இனம் தனது அரசியல் போராட்டங்களை செல்வநாயகம் என்கிற பொம்மைக் காந்தியை வைத்து, 35 ஆண்டுகளாக பட்டினிப் போராட்டங்களால் சிங்களப் படையிடம் அடிவாங்கிச் செத்தது. அதன் பின்னால் இந்த இரண்டும், தமிழினத்தின் எஞ்சிய தமிழர் மானத்தையும், மாண்பையும் சிங்களக் காடையரின் இனவெறி கலவரங்களால் அழிக்கப் பட்டன. இவர்கள்தான் எம் இனத்தின் வீர பரம்பரை என இன்றும் பேசவும், துதி பாடவும் ஒரு கூலிக் கூட்டம் இன்றும் இருக்கிறது என்பதுதான் தமிழ் இனத்தின் சாபக் கேடு.

எம் இனத்தின அவல நிலை பற்றிப் பேச, இவர்கள் யாரும் முன்வருவதில்லை. ஆனால், முந்திரிக் கொட்டை போல இவர்களும், அவர்களின் அடிவருடிகளும்தான் ஈழத் தமிழ் மக்களின் தலைவர்களாக, உலக அரசுகள் தமது இராணுவ பொருண்மிய பூகோள அரசியல் தேவைகளுக்காகப் பயன்படுத்தி வருகின்றன. தம்மானம், இனமானம், மொழி மானம் இல்லாத இந்த இழி பிறப்புகள் செய்யும் தரகு அரசியலால், தமிழினம் தன் தாயகப் பூமியை, மொழியை, கலை, கலாசார விழுமியங்களை அழிவிலிருந்து காப்பாற்ற முடியாத மக்களாக, உலக வரை படத்திலிருந்து சிங்கள மற்றும் இந்திய, சீன, அமெரிக்க அரசுகளால் அழிக்கப்பட்டு வருகிறது.

எமது மக்களைப் பற்றிய பாதுகாப்பு குறித்துப் பேச யாரும் கிடையாது. இவர்களின் ஒத்துழைப்புடன் இந்திய, தமிழக அரசும், காங்கிரஸ்கட்சி கூட்டாட்சியில் 2009, மே மாதம் நடத்திய தமிழ் இன அழிப்புப் போரை முன்னின்று நடத்திய இந்தியா, அங்கே உக்கிரெயின் - ரஷிஷப் போரில் அமைதிப் புறாவாக நடிக்கிறது. ரஷியாவின் வர்த்தகத் தடையால் கல்லாக் கட்டும் ஒரே உலக நாடு இந்தியாவாக, இலட்சம் கோடி பெறுமதியான ரஷிய நிலவாயுவைப் பணம் செலுத்தாமலே இறக்குமதி செய்து, பிற நாடுகளுக்கு விற்று, ஓசியில் முதல் இல்லாத வியாபாரம் நடத்துகிறது.

ரஷியாமீது அமெரிக்காவும், ஐரோப்பிய நாடுகளும் விதித்த பொருளாதாரத் தடையால் இந்தியா, ரஷிய இறக்குமதிகளுக்கு எந்த வழியிலும் பணம் செலுத்த முடியாத படிக்கு உலக நாடுகளுக்குச் சர்வதேசம் இருப்பதால், இந்தியாவும் பணமாகக் கொடுக்க முடியாது. ரஷியாவுடன் இறக்குமதியும் செய்து, சமப்படுத்தவும் முடியாமல் ரஷியா மீதான அனைத்துலக பொருளாதாரத் தடை தடுக்கிறது.

அதனால் சும்மா கிடைக்கும் ரஷியக் கச்சாய் எண்ணெயை, அதே ஐரோப்பிய, இலங்கை போன்ற நாடுகளுக்கு விற்று, வெளிநாட்டு நாணயமாக இந்தியா பணக்கார நாடாக மாறுகிறது. அப்படிப் பார்த்தால் ரஷிய உக்கிரெயின் போரினால் அதிக நன்மை இந்தியாவுக்கே!. எனவே, எத்தனைதான் இந்தியா அமைதி வழியில் தீர்க்க வேண்டும் என்று வெளியில் சொன்னாலும், உண்மையில் இந்தியா ‘இன்கிரெடிபிள்’ நம்ப முடியாத நண்பன் என்பது இந்த நாடகத்திலும் வெளியாகிறது.

ஆனால், இலங்கைத் தமிழ் அரசியல்வாதிகளும், அதன் அடிமை வாய்களும் ஓயாமல் கூரை மீதேறிக் கூவும் நிலையை, இன்றும் காண முடிகிறது. காரணம் தமிழ் இன அழிப்புப் போரில் இந்தியாவை அதன் தலைவர்களின் வீட்டுக் திண்ணைகள் கோடிகளில் படுத்துக் கிடந்து, கோடிக் கணக்கில் பணம் பெற்றுக் காட்டிக் கொடுத்தவர்கள் இதே தலைவர்களே!. அந்தக் கதையை எப்படி இவர்கள் தம் வாயால் வெளியே சொல்ல முடியும்?

வெளிநாட்டுத் தூதரகங்களில் பேசப் போன நேரத்தில் எல்லாம் சம்பந்தன் தனியா அல்லது தனது கைத்தடி சுமந்திரனுடன் சென்று என்ன கேட்டார்? என்ன சொன்னார்? என பத்திரிகை அறிக்கையாக என்ன வெளிவருகிறதோ? அதைத் தவிர அவரின் துரோகத் தனத்தை யாரும் அறியும் வாய்ப்பு வெளியார் யாருக்கும் இருக்கவில்லை. உதாரணமாக இந்தப் படத்தில் சம்பந்தன், சுமந்திரன், சந்திரிகா, மைத்திரிபால சிறிசேனாவுடன் தமிழர் பிரச்சினை பற்றியா பேசி இருப்பார்? ஆனால், பத்திரிகைச் செய்திகள் பொய் மூட்டைகளாக வெளிவரும். ஆனால் இப்படியும் உண்மை பேசினாரா?

இந்தப் பூனையும் பால் குடிச்சதா, நம்பாதீர்கள்! என அலறும் அப்பாவிகளும், அரசியல் விமர்சகர்களாக மக்களை ஏமாற்றும் நாடகத்தைத் திறம்படச் செய்து வருகிறார்கள்.



இந்தப் படத்தில் அமிர்தலிங்கம், இந்தியப் பிரதமர் இந்திரா காந்தி, வெளிஉறவு அமைச்சர் நரசிம்ம ராவுடன் இவ்வளவு நெருக்கமாகக் காணப்படுகிறர். இவர் இலங்கையின் எதிர்க் கட்சித் தலைவராக பதவி வகித்த காலத்தில் இசச்சந்திப்பு நடந்திருக்கிறது. இவர் நினைத்தால், இந்திரா காந்தி மூலமாகவே ஐ.நாவில் எமக்கான ஈழப் பிரகடனத்தைச் செய்வித்திருக்க முடியும்.

ஆனால், அவருக்கு ஜே.ஆரிடம் இருந்த நட்பு, தமிழ் மக்களின் உயிர்களை விட அதிகம் பெறுமதி மிக்கதாக அவருக்குப் பட்டது. 1983 கருப்பு ஜுலைக் கலவரத்தின் பொழுது, ‘சிங்கள மக்களுக்காக எல்லாத் தமிழ் மக்களையும் கொல்லத் தயார்’ என்ற ஜே.ஆர். செய்த மிரட்டலுக்குப் பயந்து, இந்திரா காந்தியின் சேலைத் தலைப்பில் ஒளிந்து கொண்ட மாவீரன், தமிழர் படைத்தளபதி இந்திரா காந்தியிடம் என்ன கேட்டு, என்ன வாங்கித் தந்தார்?






ஈழத் தமிழ் மக்களின் கண்ணீரிலும், இரத்தத்திலும் பிராந்திய அரசியலை சீனா, அமெரிக்கா, பாகிஸ்தான் போன்ற எதிரி நாடுகளுடன் கூட்டாக எம் இனத்தை அழித்த இந்தியா, உக்கிரெயின் - ரஷியப் போரிலும் மட்டும் அல்ல, இஸ்ரவேல் - பலஸ்தீனப் போரிலும், அமெரிக்கா, இஸ்ரவேல் ஆதரவு நிலை எடுத்து, அவர்களின் நண்பனாகவும் இலாபம் அடைகிறது.

காசு பணத்துக்காக எதையும் செய்பவர்களைப் பொதுவாக எப்படி அழைப்பார்களோ? அப்படி அழைத்தால் மகா மட்டமான தொழிலைச் செய்வதாக சொல்ல வேண்டி வரும். அதனால் நம்பிக்கை, நாணயம் அற்ற பேர்களை ஆங்கிலத்தில் ‘இன்கிறடிபிள்’ என்று அழைப்பார்கள். இதே சொல்லுக்குப் பிரமிக்கத்தக்க என்கிற அர்த்தமும் உண்டு. அந்த அர்த்தத்தில் இந்தியா தன்னை ‘இன்கிறெடிபிள் இந்தியா’ எனப் பிரச்சாரப் படுத்துகிறது.

ஈழத் தமிழரைப் பொறுத்த வரை, எல்லாக் காலத்திலும் வயித்துக் குத்தை நம்பினாலும், வடக்கனை அதாவது இந்தியனை நம்பக் கூடாது என்பது, காலம் காலமாக இருந்து வரும் முதுமொழி. இந்திய சுதந்திரப் போராட்டத்தின் பொழுது காந்தி மீதும், ஏனைய வட இந்திய தலைவர் மீதும் தமிழ் மக்கள் வைத்த நம்பிக்கை, இன்று வரை காற்றில் கரைந்தக் கற்பூரமாக நம்பி, நாசமாய்ப் போன கதையாகவே முடிந்து விட்டது.

‘தட்டானைத் தொட்டானும் கெட்டான்’ என்பதுபோல பெரியாரையும், கலைஞரையும் நம்பிய செல்வா அமிர்தலிங்கம், சம்பந்தன் வரையான எல்லா ஈழத் தமிழ் அரசியல் தலைவர்களும், ஈழத் தமிழ் மக்களை இன்றைய அழிவு நிலைக்குக் கொண்டு வந்தார்கள் என்பதை, மே, 2009 தமிழ் இனப்படு கொலை பற்றி வெளிவரும் உண்மைத் தகவல்கள் உறுதிப் படுத்துகின்றன.

தந்தை செல்வாவை பேச்சு, மூச்சற்ற நிலையில் மேடைகளில் நடத்திய பொம்மலாட்ட அரசியலால் பண்டா செல்வா, டட்லி போன்றவர்களால் தமிழ் மக்களின் அரசியல் உரிமைகளை அபகரிக்க முடிந்தது. பிரித்தானிய அரசால் சிறுபான்மை மக்களுக்கான பாதுகாப்பு




விதிகளையும் 1972இல் ஸ்ரீமாவோ புதிய குடியரசு அரசமைப்புச் சட்டத்தின் மூலம் பறிக்கப்பட்டு, தமிழரின் மொழி, மத, இன சுதந்திர உரிமைகளையும், தனிச் சிங்கள புத்த மத இனவெறி ஆட்சியால் பறிக்க முடிந்தது.

ஸ்ரீமாவோ திட்டமிட்டுச் செய்த இந்தத் தமிழ் இன மத மொழி அழிப்பைத் தடுக்கும் வழிகள் இருந்தும், அமிர்தலிங்கம் தலைமையிலான தமிழ் அரசுக் கட்சி தடை செய்ய மறுத்தது. தடுக்க வேண்டும் என வேண்டுகோள் விடுத்த, தமிழ் அரசாங்க எழுது வினைஞர் சங்கம் தடுக்கப்பட்டு, தமிழ் அரசுக் கட்சி தமிழர் விடுதலைக் கூட்டணி என உருமாறி, தனது தேர்தல் வெற்றியாக 1977 மடை மாற்றி, ஜே.ஆரின் கைப் பாவையாக மாறி, தமிழ் இளைஞர்கள் முன்னெடுத்த ஆயுதப் போராட்டத்தை, அனைத்து உலக அரசுகளின் துணை கொண்டு அழித்தது.

இந்தியப் பிரதம மந்திரி இந்திரா காந்தி, பாதுகாப்பு இமைச்சர் நரசிம்ம ராவோ ஆகியோருடன் இந்த அளவுக்கு நெருங்கிப் பழகும் வாய்ப்பை பெற்றிருந்த அப்பாப்பிள்ளை அமிர்தலிங்கம் இலங்கைப் பாராளுமன்றத்தின் எதிர்க் கட்சித் தலைவராகப் பதவி வகித்த காலத்தில் இந்தச் சந்திப்பு இடம் பெற்றிருந்தது. தமிழ் மக்களின் அரசியல் பிரச்சனைக்கான தீர்வைப் பெற இவர் நினைத்திருந்தால், மிக எளிதாக ஐ.நா.சபை மூலமாக சர்வதேச அங்கீகாரத்துடன் தனித் தமிழ் ஈழத்தை உருவாக்கி இருக்க முடியும்.

இத்தனைக்கும் இந்த முக்கிய 3 இனத்தின் அரசியல் தலைவர்களும், 1976இல் வட்டுக் கோட்டையில் செய்த பிரகடனம் மற்றும் 1977இல் நடந்த பாராளுமன்றத் தேர்தலில் தனித்தத் தமிழ் ஈழத்துக்கான தமிழ் மக்களின் ஆணையை மிகப் பெரும்பான்மை பலத்துடன் வெற்றி பெற்று, இலங்கையின் அதிகாரம் பெற்ற எதிர்க் கட்சித் தலைவராகப் பதவியும் பெற்றிருந்த வேளையில், 1983 கறுப்பு



ஜூலைக் கலவரத்தால் உலகத்தின் கவனமே ஈழத் தமிழர் பக்கம் அனுதாப அலையால் மூழ்கிக் கிடந்த நேரம்.


செல்வா


ஜீ.ஜீ.


சௌ.தொண்டைமான்

இப்படியான தருணத்தைக் கூட நழுவவிட்ட தலைவர்கள், மூஞ்சூறைக் கூடப் பிடிக்கத் தெரியாத நாய்கள் எனச் சொல்வதில் என்ன தவறு? எம் இனத்தை அழித்தவர்கள் தமிழ் இன எதிரிகள் அல்ல, தமிழ் இனத் தலைவர்கள்தாம் காரணம். தமிழினத்தின் அரசியல் தலைவர்களாக விளங்கிய பொன்னம்பலம், இராமநாதன் போன்றவர்கள் ஆங்கிலேய ஆட்சியாளர்களால், அவர்களின் திட்டங்களைச் செயற்படுத்த நியமிக்கப் பட்டக் கூலிகளே!. அவர்கள் என்றுமே அப்பாவிப் பொது மக்களுக்காகச் செயற்படவோ, மக்கள் சேவைக்காகவோ வாழ்ந்தவர்களோ இல்லை.

சிங்களத் தலைவர்கள் சீமையில் படித்தாலும், வெளி நாட்டுப் பெண்களை மணந்தாலும், மனத்தாலும், இனத்தாலும், குணத்தாலும் மாறாமல் சிங்களவராகவே வாழ்ந்தார்கள், ஆட்சிகளையும் செய்தார்கள். 1956 தொடக்கம், எல்லாக் கலவரக் காலங்களிலும், மே 2009லும், அதன் பின்னரும் அழிக்கப்பட்ட மக்கள், தமிழரின் எதிரிகள் அல்ல. தமிழ் மக்களின் இன விடுதலை இயக்கமான, தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கமும், அவர்களை நம்பிய தமிழீழ மக்களும்தான்.

90 வயதைக் கடந்த நிலையிலும், தமிழ் இன அழிப்புக்கு முழுமையாகக் காட்டிக் கொடுத்து, எதிரிகளுக்கு உதவி செய்த உத்தமர் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஆயுட்காலத் தலைவர் இராஜவரோதயன் சம்பந்தன் பாராளுமன்ற உரையில்,




"அமெரிக்கா தந்த உறுதி மொழியை நம்பி, போருக்கு உதவினோம், ஏமாற்றப் பட்டோம்" கூறி உள்ளார் என அண்மையில் ஊடக ஆய்வாளர் நிக்சன், லங்கா சிறியின் ஊடறுப்பு நிகழ்ச்சியில் கூறி உள்ளார். அவரின் தனித் தமிழ் ஈழ ஆதரவுக்கு அகரம் சார்பாக நன்றி தெரிவிக்கிறது.

ஊடறுப்பு பதிவின் விபரம் பற்றிய இணைப்பு;

***<https://www.youtube.com/watch?v=98EzKu-kFtU>***

இப்படியான துரோகிகளின் நினைவாக, ஈழத்தில் இனத் துரோகிகளின் நினைவுக் கோட்டம் நிறுவப்பட்டு, இவர்களின் வருங்காலச் சந்ததியைக் காலம் எல்லாம் அவமானப் படுத்தினாலும், இவர்களின் துரோகத்தால் விளைந்த பாவம் போகாது. இவர்கள் ஈழத் தமிழர்களின் அரசியல் தலைவர்கள் என உலகத்தால் முழுமையாக அங்கீகரிக்கப் பட்டவர்கள். இவர்களில் யாரும் புலிப் பயங்கரவாதிகள் இல்லை. பிறப்பால் சுத்தமான தமிழ்ப் பெற்றோர்கள் பெற்றத் தமிழர்களும் இல்லை. விஜயன் சந்ததிக்குப் பிறந்த குடிகேடிகள் என்று செல்வதுதான் பொருத்தமாக இருக்கும்

அதனால் உலக பயங்கரவாதிகள் எனப் பிரகடனப்படுத்தப்பட்டத் தமிழீழ விடுதலைப் புலிகள் யாரும் இந்தப் படத்தில் இல்லை. அவர்கள் எல்லாம் மா வீரர்களாகி, மக்கள் மனங்களில் அமரர்களாக வாழுகின்றார்கள்.

"இந்த மண், எங்களின் சொந்த மண்" பாடலில் தொடங்கி, 'சந்தனப் பேழையில்' என்ற பாடலால் மாவீர் நாள் வணக்கப் பாடலை உயிர்ப்புடன் பாடி, எல்லாராலும் கைவிடப்பட்ட அவல நிலையில், உயிர் நீத்த தமிழீழப் பாடகர் சாந்தனையும், வீதிகளில் எழுச்சிப் பாடல்களால் "அண்ணா, அக்காமார்களே எதிரி நம்மை ஆள விடலாமா?" என மழலைக் குரலில் பாடி, மா வீரனான குட்டிச் சாந்தனையும் நினைவு கொள்ள வேண்டிய மாதம் இது.

மீண்டும் இந்தியாவின் காலடியில் நம் இனம் விழுந்து, மடிவதை இந்த மாவீரர் மாதம் தடுக்கும் வழியில், நம் இனத்தின் அரசியல் பயணம் தொடர வேண்டும்.





# விஜயகாந்த்

## நிரப்பமுடியாத வெற்றிடம்



**வி**ஜயகாந்த் எனும் மனிதரைப் பற்றி நினைக்கும்போது என்ன எனக்குத் தோன்றுகிறது? எனது நினைவில் தங்கியவைகளை அசைப் போட்டுப் பார்க்கிறேன்.

1980களில் தமிழ் சினிமாவில் ரஜினிகாந்த், கமல் எனும் இரு பெரும் நடிகர்கள் கோலோச்சிக் கொண்டிருந்தார்கள். அந்தக் காலங்களில் சத்யராஜ், பிரபு, கார்த்திக் போன்றவர்களும் தங்களை நிலை நிறுத்த போராடிக் கொண்டிருந்தார்கள்.

80களின் நடுப்பகுதி வரை விஜயகாந்த்திற்கும், தன்னை உறுதியாக நிலைநிறுத்த முடியாத நிலை இருந்தது. அவர் எந்த வகை நடிகர்? என தீர்மானிக்க முடியாத நிலை இருந்தது. அன்றைய காலங்களில் தமிழ் சினிமாவில் இந்த வகை கேரக்டர், இந்த வகை கதைக்கு ஏற்றவர் என ஒரு பெட்டிக்குள் தன்னை அடைத்து வைத்தால்தான் நிலை நிறுத்திக்கொள்ள முடியும்.

அந்தக் காலகட்டத்தில் முன்னணி நடிகையாக இருந்த ராதிகா, தனது பல படங்களில் விஜயகாந்தினை கதாநாயகனாக முன்னிறுத்தி உதவி

செய்தார். இதற்கிடையில் விஜயகாந்தினது சில படங்கள் பெரும் வெற்றியையும் பெற்றிருந்தது. உதாரணம் ஊமை விழிகள், வைதேகி காத்திருந்தாள், அம்மன் கோவில் கிழக்காலே, இன்னும் சில. ஆனால், மேலே கூறிய எந்த வகை நடிகர்? என்ற பிரச்சினை இருந்தது. பிறகு செந்தூர பூவே திரைப்படம் ஒரு பெரும் திருப்பத்தைத் தந்ததாக ஞாபகம். அது விஜயகாந்திற்கு என ஒரு தனி அடையாளத்தை உருவாக்குவதற்கு ஆரம்பமாக இருந்தது என நினைக்கிறேன்.

அதன்பிறகு புலன் விசாரணை திரைப்படம். ஆட்டோ சங்கர் கதையை மேலோட்டமாக தழுவி எடுக்கப்பட்டப் படம். பெரும் வெற்றியை பெற்றது. விஜயகாந்திற்கு திருப்பு முனையைத் தந்த படம் இதுதான். அதுதான் விஜயகாந்திற்கு ‘இந்த வகை நடிகர்’ என்ற தனித்த அடையாளத்தை ஏற்படுத்தி தந்தது. இதுதான் என் வழி என அவருக்குப் பாதையைப் போட்டுத்தந்தது.

அதன்பிறகு விஜயகாந்த் அந்த வழியில் வீறுநடை போடத் தொடங்கினார். நேர்மையான, தேசியத்தை உயிராக நினைக்கும் போலிஸ் அதிகாரி, கறைபடிந்த அரசியல்வாதிகளை உலுக்கி எடுப்பது, ஏழைகளின் தோழனாக இருப்பது என அந்த டெம்ப்ளேட்டில் பல படங்கள் வெளியாகின. சத்திரியன், கேப்டன் பிரபாகரன், மாநகர காவல், சேதுபதி மிறிஷி, ஆனஸ்ட் ராஜ், ராஜதுரை, வல்லரசு, அலெக்ஸாண்டர், உளவுத்துறை, நரசிம்மா என்பவை எனக்கு ஞாபகத்திற்கு வந்த படங்கள்.

இந்தக் காலகட்டங்களில் ரஜினி, கமல் என இரு பெரும் நடிகர்களுக்கு அடுத்து பெரிய மார்க்கெட், பெரும் ரசிகர் பலம் உள்ள நடிகர் என நிலையான இடத்தை விஜயகாந்த் உருவாக்கி கொண்டார். குறிப்பாக பி சென்டர், சி சென்டர் பகுதிகளில் அவரின் பல படங்கள் பெரும் வெற்றியைப் பெற்றன. அவர் அடுத்த பாய்ச்சலை அரசியலில் ஏற்படுத்துவதற்கு ஏற்ற களத்தை அவை தயார்படுத்தி தந்தன.

அடுத்தது விஜயகாந்த்தின் அரசியல். விஜயகாந்த்தின் அரசியல் பிரவேசம் அவர் எத்தகைய மன துணிவுடையவர் என்பதைக் காட்டியது. ரஜினிகாந்த் “எப்ப வருவேன், எப்படி வருவேன்னு எனக்கே தெரியாது” எனப் பொருத்தமே இல்லாத வசனத்தைப் பேசி, தமிழ்நாட்டின் தலையைச் சுற்ற வைத்து கொண்டிருந்த காலத்தில், அரசியலுக்கு வருவேன் என ஒரு சில படங்களில் காட்சிகளை வைத்துவிட்டு, விஜயகாந்த் அரசியலுக்கு தடாலென வந்துவிட்டார். நரசிம்மா



படத்தில் ரஜினிகாந்தின் அரசியல் வழவழா டயலாக்குகளை நையாண்டி செய்துகூட சில காட்சிகள் வரும்.

விஜயகாந்தின் அரசியல் சித்தாந்தம் என்பது கலவையானது. விஜயகாந்த் அவர்களுக்கு ஆழமான அரசியல் சித்தாந்தப் பார்வை இருந்ததாக நான் கருதவில்லை. ஆழமான சித்தாந்தப் பார்வை, ஆழமான வரலாற்றுப் பார்வையூடாக உருவாவது.

அவரின் அரசியல் அறிவு என்பது, எளிமையானது. அரசியல் அதிகாரத்தை கைப்பற்றினால், மக்களுக்கு நல்லதை செய்யமுடியும் என்பதை போன்ற ஒரு அரசியல் பார்வையே விஜயகாந்த்திற்கு இருந்திருக்க வேண்டும் என்பது என் அனுமானம்.

அரசியலுக்கு வந்த சில வருடங்களிலேயே விஜயகாந்த் உயரங்களைத் தொட்டார் எனத்தான் சொல்லவேண்டும்.

அவரது முதல் சட்டமன்ற தேர்தலான 2006 இல், அவரது கட்சி தனித்து நின்று 8.4% வாக்குகளைப் பெற்றது. விஜயகாந்த் ஒரு சீட்டினை பெற்றார். 2009 பாராளுமன்ற தேர்தலில், விஜயகாந்த் கட்சி தனித்து நின்று, 10% வாக்குகளைப் பெற்றது. 3 வருடத்தில் அடைந்த உயரம் இது.

இதனது உயரத்தை மற்றைய கட்சிகளின் வாக்கு சதவீதத்தோடு ஒப்பிட்டால் புரிந்து கொள்ளமுடியும். பல வருட அரசியல் பின்னணியைக் கொண்ட வைகோவின் மதிமுக கட்சி, இதுவரை தனித்து நின்று 6% ஐ தாண்டியதில்லை. பாமகவும் தனித்து நின்று 6% ஐ தாண்டியதில்லை. 2011 இல் வழமையான தேர்தல் சமரசங்களுடன் விஜயகாந்த் எதிர்கட்சி தலைவரானார். எல்லாமே சரியாகத்தான் போய் கொண்டிருந்தது.

எது தலைகீழாக புரட்டி போட்டது? அவரது உடல்நிலை. 2014 வரை அவரது உடல்நிலை ஓரளவு சரியாகவே இருந்தது. அதன் பின்பு அவரது உடல்நிலை விரைவாக சரிய ஆரம்பித்தது. 2016 இல் நாம் பார்த்த மக்கள் நல கூட்டணி விஜயகாந்த் என்பது, தனது சுயநிலையை அடிக்கடி தவற விடுகின்ற உடல்நிலையைக் கொண்டார் விஜயகாந்த்.

அந்த உடல்நிலையைக் காட்டி திமுக, அதிமுக சார்பு ஊடகங்கள் 'விஜயகாந்த் ஒரு கோமாளி, குடிகாரர்' என்ற பிம்பத்தை உருவாக்கின. இது திட்டமிட்டு உருவாக்கப்பட்டது. இது மக்கள் மத்தியில் விஜயகாந்த் பற்றிய மதீப்பீடுகளை மாற்றின.

விஜயகாந்தின் உடல்நிலை சரியாக இருந்திருந்தால் ஜெயலலிதா, கருணாநிதி மறைவுக்குப் பின்னரான வெற்றிடத்தை விஜயகாந்த் எளிதாக நிரப்பியிருப்பார் என்றே நினைக்கிறேன்.

ஏனெனில் ஸ்டாலின், எடப்பாடி பழனிச்சாமி இருவரையும் விட மக்கள் மத்தியில் பிரபலமான முகம் விஜயகாந்த். தேர்தல் அரசியல் என்பது ஒரு வினோதமான, சிக்கலான விளையாட்டு. இங்கு ஒரு ஒளிவட்டமும் தேவை, பிம்பமும் தேவை. அதுதான் மற்றைய அரசியல்வாதிகளிடமிருந்து ஒருவரை தனித்துப் பிரித்து காட்டி, இவர் முதல்வருக்கு ஏற்றவர் என்ற உணர்வினை தருவது.

அந்த ஒளிவட்டமும், பிம்பமும் விஜயகாந்திற்கு இருந்தது. அவரது உடல்நலம் நன்றாக இருந்திருந்தால், அவரது வெகு இயல்பான மேடைப்பேச்சும், பிம்பமும் ஸ்டாலினை தூக்கிச் சாப்பிட்டிருக்கும்.

மேலே கூறிய திரைப்பட வாழ்க்கையிலும், அரசியல்

வாழ்க்கையிலும் விஜயகாந்தின் முக்கியமான குணாம்சங்கள் மாறாது இருந்தன. விஜயகாந்த் எனும் மனிதநேயம் மிக்க, இரக்கம் மிக்க, பலன் பாராது உதவி செய்யக்கூடிய ஒரு மனிதர் இருந்தார். இந்த இரண்டிலும் விஜயகாந்தை நம்பி நான் கெட்டேன், மோசம் போனேன் என எவரும் கூறியதில்லை.

அவரின் திரைப்பட வாழ்க்கையில், எந்தவொரு தயாரிப்பாளரும் விஜயகாந்த்தினால் நான் எனது சொத்தினை இழந்தேன் என கூறியதில்லை. பல நடிகர்களின் சொந்த நடத்தையால் பல தயாரிப்பாளர்களின் வாழ்க்கை நடுத்தெருவிற்கு வந்திருக்கிறது. ஆனால், விஜயகாந்தினால் அத்தகைய நிலை எவருக்கும் ஏற்பட்டதில்லை.

அத்துடன் அவருக்கென்று 'தனி மனித ஆளுமை' இருந்தது என்பதற்கு, அவர் நடிகர் சங்கத்தை வெற்றிகரமாக நடத்தி காட்டிய விதமே ஒரு சான்றுதான். தமிழ் சினிமாவின் சகல நடிகர்களையும் வர வைத்து, சிங்கப்பூரில் கலை நிகழ்ச்சி நடத்தியது, அவரது சொல்லுக்கு அத்தனை பேரும் தலையசைக்கிறார்கள் என்பதைக் காட்டியது. 2001 இல், உச்ச நடிகர்களான ரஜினிகாந்த், கமலை கலை நிகழ்ச்சிக்கு வரவைப்பது என்பது சாத்தியமானதல்ல என்பதை வயதான தலைமுறை அறியும்.

அவர் நடிகர் சங்கத்திலிருந்து விலகியபின்பு, எத்தகைய காமெடிகள் நடந்தன என்பதை நாடறியும். எல்லாவற்றையும் தாண்டி, விஜயகாந்த் என்ற ஒரு மனிதர் ஒரு வள்ளலாக, உதவி செய்பவராக, இரக்க குணமுடையவராக வாழ்ந்திருக்கிறார் என்பதை இத்தனை வருடங்களில் பலரது கூற்றுக்களில் இருந்து அறிந்து கொள்ளமுடிகிறது.

இதனை பலரும் உணர்வுப் பூர்வமாக நெகிழ்ந்து பல நேரங்களில் பகிர்ந்திருக்கிறார்கள். இத்தகைய உணர்வுபூர்வமான நெகிழ்தலை முன்னர் எம்.ஜி.ஆரைப் பற்றி பேசும்போது கண்டிருக்கிறேன். அதன்பிறகு விஜயகாந்த் எனும் மனிதரைப் பற்றி பேசும்போதுதான் கண்டேன்.



# தேசியக் கவிஞர்
# புதுவை இரத்தினதுரை
# அவர்களின் தாயகப் பாடல்கள்

பகுதி - 1

துளசிச்செல்வன்.

**தி**யாகி திலீபன் ஈகைச் சாவோடு கசியாத கண்களில்லை, சுரக்காத பேனாக்கள் இல்லை, உருகாத நெஞ்சமில்லை என்று தான் சொல்ல வேண்டும். அந்தத் தியாக நெருப்பில் புடம் போட்ட தங்கங்களில் ஒன்றுதான் கவிஞர் புதுவை இரத்தினதுரை அவர்கள். கவிஞர் அதற்கு முன்னர் இரண்டு தசாப்த காலங்களாக எழுதிக் கொன்டுதான் இருந்தார். வானம் சிவக்கிறது (1970), இரத்த புஷ்பங்கள்(1980) ஒரு தோழனின் காதற் கடிதம் போன்ற கவிதைத் தொகுப்புகளையும் வெளியிட்டிருந்தார்.

பரதன், தளபதி கிட்டு, திலீபன் போன்றவர்களுடனான தொடர்பும், நட்பும் ஆரம்ப காலத்தில் போராட்டப் பங்களிப்புகளிற்குள் இழுத்து வந்தது. இந்திய, புலிகள் போரின் விளைவாக ஏற்பட்ட புலிகளின் தலைமறைவுப் போர் முறையினால், போராளிகளிற்கும் கவிஞருக்குமான தொடர்புகளைப் பேணுவதில் சிக்கல்கள் இருந்தன.

1988 ஆண்டு மத்திய கிழக்கு நாடொன்றிற்கு வேலைக்காகப் புறப்படவிருந்தவரை போராளி ராவ் தொடர்பு கொண்டதிலிருந்து தொடங்குகிறது மீண்டும் புலிகளுடனான தொடர்பு. தன்னை ஒரு போராளியாக மாற்றி, சீருடை அணிந்த புலியாக அவர் எழுதியவை ஏராளம். “யாகம் தொடங்கி விட்டோம், ஒரு வேள்வி தொடங்கி விட்டோம்” என்று ஆரம்பமாகிறது புதுவை இரத்தினதுரை அவர்களது பாடல் எழுதும் பணி.

“பூங்குயில் பாடிய மேடையில், நாமொரு பூசை தொடங்கி விட்டோம்” என்று தியாகி திலீபன் நினைவுகளைத் தாங்கிய தனது பாடல் எழுதும் பணியைக் குறிப்பிடும் அவர் திலீபனின் நினைவில் எழுதியவை ஏராளம்.

கவிஞர் பாடல் எழுத ஆரம்பித்தால், எழுத்துகள் எழுந்தோடி வந்து அவர் அருகில் நிற்கும்.

மிகவும் விரைவாகவும், இசையமைக்க ஏற்றவாறு நேர்த்தியாகவும் இருக்கும்



அவரது பாடல் வரிகள். அவரது கவிதைகள் உரைவீச்சுகளாகவும், நெடு வசனங்களாகவுமிருக்கும். ஆனால், பாடல்கள் ஓசை நயத்துடன் சந்தக் கவிதைகளாகவுமிருக்கும்.

எமது தாயகப் பாடல்கள் எனும் போது, தாயகத்தில் உருவாக்கப்பட்ட பாடல்கள், தாயகத்திற்கு வெளியே, தாயகம் நோக்கிய தவிப்பாக உருவாக்கபட்ட பாடல்கள் என்று இரண்டு பெரும் பிரிவுகளிற்குளடங்கும்.

1987 ஆவது ஆண்டில், தியாகி திலீபன் ஈகைச் சாவோடு உணர்வெளிச்சி பெறும் எமது போராட்டம் சார்ந்த படைப்புகள், பாடல் என்ற வடிவத்தையும் பெறுகிறது.

இந்தப் பாடல்களை காலத்தின் அடிப்படையில் மூன்றாகப் பிரிக்கலாம். எமது பாடல்கள் உருவான காலத்திலிருந்து 2002 வரை முதற்பிரிவாகவும், (இந்தக் காலத்தில் ஒலிநாடாக்களே பாவனையிலியிருந்தன. பாடல் உருவாக்கப்படும் முறையும், கலையகத்தில் எல்லா கலைஞர்களும் ஒன்றாவிருந்து பக்கவாத்தியங்கள் அனைத்தும் ஒரே நேரத்தில் வாசித்துப் பதியும் முறையில் இருந்தது.)

2000களின் ஆரம்பத்தில் இருந்து, 2009வரை இரண்டாவது பிரிவாகவும், 2009ற்கு பின்னர் மூன்றாவது பகுதியாகவும் பார்க்கலாம்.

(2000 ஆண்டுகளின் பின்னர் அதிகளவில் உள்நுழைந்த கணினித் தொழில்நுட்பம் ஒலிப்பதிவுத் துறையிலும், பாடல் உருவாகும் முறையிலும் பல மாற்றங்களைக் கொண்டு வந்தது. புதிய பல இசையமைப்பாளர்கள் வெளிவந்தார்கள்.)

அவரது பாடல்கள் பாடிய விடயம், தமிழ் மக்களின் களமும், களத்தில் நிகழ்ந்த வீர மரணங்களும் தான் அதிகம். இதில் முதல் இரண்டு பகுதிகளிலும் மிகவும் முக்கியமான பகுதியாக விளங்கியவர் தேசியக் கவிஞர் புதுவை இரத்தினதுரை அவர்கள்.

தாயகப் பாடல்கள் உருவான காலத்திலிருந்து, 2009 ஆவது ஆண்டு வரை பாடலாசிரியராக அவர் அமர்ந்திருந்த கவிராயர் சிம்மாசனத்தை யாராலும் நெருங்க முடியவில்லை.



அவரது பாடல்கள் பாடிய விடயம், களம், களத்தில் நிகழ்ந்த வீரமரணங்களும்தான் அதிகம். வீரச் சாவு ஒன்றைப் பாடுகளமாக்கி, வீரரை அஞ்சலிப்பதோடு, அதைச் சபதமாக எடுத்துப் போராட்டப் பயணத்தைத் தொடர்வதற்கான நெஞ்சுரத்தைக் கொடுப்பதாக அமைந்தன அவரது எழுத்துகள்.

இதை அர்த்தப்படுத்தி, கவிஞரை மதிப்பளிக்கும் விதமாக, புதுவை இரத்தினதுரை அவர்களின் கவிதைகள் போராட்டத்திற்கு வலுச்சேர்க்கும் ஒரு இலக்கிய பணி என்றும், போராட்ட இலக்கியங்களிற்கு இலக்கணம் வகுத்தவர் என்றும், தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு வே. பிரபாகரன் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.

**இதுவரை வெளிவந்த தாயகப் பாடல்கள்.**

ஆரம்பம் தமிழகத்தில், “இது புலிகள் பாடல், புயல்கால இராகங்கள், களத்தில் கேட்கும் கானங்கள், பாசறைப் பாடல்கள்” (இந்தப் பட்டியல் நீளமானது. இங்கே ஆரம்பத்தில் வந்தவைகளையே குறிப்பிடுகிறேன்.)

தமிழீழத்தில் உருவான முதலாவது ஒலிநாடா “இந்த மண் எங்களின் சொந்தமண்.” இதன் இசையமைப்பாளர் இசைவாணர் கண்ணன் அவர்கள். புதுவை இரத்தினதுரை அவர்களின் பாடல்கள் பற்றிப் பேசும்போது இசைவாணர் கண்ணன் அவர்களும் கூடவே வருவார்.

தமிழீழத்தில் நிலக்கீழ் பதுங்குகுழியில் அமைந்த ஒலிப்பதிவு கலையகத்தில் உருவான முதற்பாடல் ஒலிநாடா.

“இந்த மண் எங்களின் சொந்தமண்” இதுவரை (2023 /12/03) வெளிவந்த மொத்த ஒலிப் பேழைகள் களத்தில், புலத்தில், தமிழகத்தில் அண்ணளவாக 385.

தாயகத்தில், புலம் பெயர்ந்த நாடுகளில், தமிழகத்தில், ஒலிப்பேழைகள் இல்லாமல் தனிப் பாடல்களும் வெளிவந்திருக்கின்றன. இந்த பாடல்களை வெளியீடு செய்தவர்கள்.

தொடரும்..






இலட்சுமணன்

# ரணிலின் வடக்கு விஜயத்தின் தார்ப்பரியம்

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் வடக்குக்கான விஜயத்தின் தார்ப்பரியம், தமிழ் மக்களுக்கான அரசியல் தீர்வு விடயத்தில் மிக முக்கியமானதாகப் பார்க்கப்பட வேண்டும்.

வடக்கு விஜயத்தின் போது அவர் வெளியிட்ட மாகாண மட்டத்தில், வலுவான பொருளாதாரத்தைக் கட்டியெழுப்பஈ அரசியலமைப்பின் 13ஆவது திருத்தத்தின் மூலம் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்கள் போதுமானது. எனவே, அவற்றில் மத்திய அரசாங்கம் தலையிடாது. அதேபோல் அதிகாரப் பகிர்வு என்பது, ஒரு அரசியல் எண்ணக் கருவாக மாத்திரம் அன்றி, பொருளாதார அடிப்படையிலும் யதார்த்தமாக அமைய வேண்டும் என்று கூறியிருக்கிறார்.

யுத்த காலத்தில் இடம்பெயர்ந்த மக்களின் மீள்குடியேற்றம், 2,000 நாட்களையும் தாண்டி நடைபெற்று வருகின்ற நிலையில், காணாமல் போனோரின் உறவினர்களின் போராட்டம், வடக்கு, கிழக்கின் காணிப் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணுதல், அத்துமீறிய தமிழ்ப் பிரதேசங்களின் மீதான சிங்களவர்களின் ஆக்கிரமிப்புகள், தொல்பொருள் என்ற போர்வையில் நடைபெற்றுவரும் தமிழர்களது வரலாற்றிடங்களின் கையகப்படுத்துதல்கள், பாதுகாப்புத் தரப்பினரின் நெருக்குதல்கள் எனப் பல்வேறு தீர்க்கப்படாதப் பிரச்சினைகள் காணப்படுகின்றன. இந்த நிலையில் அவரது விஜயத்தின் போது, இவை குறித்துக் கவனம் எடுக்கப்பட்டது போதாமலிருக்கிறது.

பொருளாதார ரீதியாக வீழ்ச்சியடைந்திருக்கும் முழு நாட்டையும் கட்டியெழுப்ப வேண்டிய கடுமையானதொரு சாதனையை முடித்து வைக்க வேண்டிய நிலையிலுள்ள ஜனாதிபதி, தமிழ் மக்களது பிரச்சினைக்குத் தீர்வுகாணாது, அதனை எவ்வாறு அடைந்து கொள்வார்? என்பதுதான் இதிலுள்ள சிக்கலாகும். இந்த இடத்தில்தான் சிங்களப் பெரும்பான்மை மக்களைத் திருப்திப்படுத்துவதுடன், தமிழ் மக்களின் அரசியல் அபிலாசைகளை நிறைவேற்ற வேண்டும் என்பதுதான் நேரெதிரான மோதலாகும்.

இது வெறுமனே அவரால் மாத்திரம் முடித்து வைக்கக் கூடியதொரு சிக்கலாக அமைந்திருக்கவில்லை என்பதுவே இதிலுள்ள உண்மை. இதனால்தான் அனைவரையும் ஒன்றுபடுமாறு அவர் அழைப்பு விடுத்திருக்கின்ற அதேவேளை, முதலீடுகளுக்காகப் புலம்பெயர்ந்தோருக்கும் அழைப்பை விடுத்திருக்கிறார். இதில்தான்

அவருடைய தந்திரம் வெளிப்பட்டு நிற்கிறது.

காலி முகத்திடலில் நடைபெற்ற அரகல போராட்டத்தின் பயனாக, கோத்தபாய பதவியிலிருந்து துரத்தப்பட்டதையடுத்து, ஜனாதிபதியாக ஆட்சிக்கு வந்தது முதல், அவர் இலக்கு வைப்பது முழுக்க முழுக்கப் புலம்பெயர் தமிழர்களையே!. வடக்கு, கிழக்கில் யுத்தம் நடைபெற்ற காலங்களிலும் சரி, அதற்குப் பின்னரும் தொடர்ந்த புலம்பெயர் தமிழர்கள் பலருடைய, பல புலம்பெயர் அமைப்புகளுடைய தடைகளைப் பதவிக்கு வந்தவுடன் நீக்குவதாக அறிவித்தார்.

அதன் தொடர்ச்சியாகவும், ஒரு பகுதியாகவும் உலகத் தமிழர் பேரவையினரால் 'இமயமலைப் பிரகடனம்' கடந்த வருடத்தின் இறுதிவாக்கில் அரசாங்கத்தின் ஆசீர்வாதத்துடன் மேற்கொள்ளப்பட்டது. அவ்வளவு அவசரமாக அதற்கான தேவை இப்போது ஏன் ஏற்பட்டது? என்பதுதான் இன்னமும் பலருக்கும் புரியாத புதிராக இருக்கிறது. அதே நேரத்தில் புலம்பெயர் தேசத்தினால் இவ்வாறனதொரு முயற்சி மேற்கொள்ளப்படுவதற்கு தமிழர்களின் அரசியல் தலைமைகளின் இயலாமையும், தலைமை தாங்குவதற்கான வல்லமையற்றுப் போனமையும் காரணம் என்றும் விமர்சிக்கப்பட்டது.

அதே நேரத்தில் தமிழ் மக்களுடைய இனப்பிரச்சினைக்கான தீர்வை எட்டுவதற்குரிய ஏற்பாடு ஒன்றைச் செய்து வைப்பதற்கு, நேபாளம் ஏன் தெரிவு செய்யப்பட்டது? அழைக்கப்பட்ட தரப்பினர், ஒழுங்குபடுத்தப்பட்ட முறைமை, அத்துடன் 'இமயமலைப் பிரகடனம்' என்பன குறித்து பல கேள்விகள், சந்தேகங்கள் எழுந்திருக்கின்றன. நாட்டிலுள்ள பிரச்சினைகளுக்கும், வடக்கு - கிழக்கு தமிழ் மக்களுக்கும் இமயமலைப் பிரகடனத்தின் மூலம் தீர்வு கிடைத்துவிட்டது என்பது போன்ற தோரணையில் சந்திப்புகளும், பேச்சுகளும் நாட்டில் நடந்து முடிந்துவிட்டது. அதன் பின்னரான விமர்சனங்கள் இன்னமும் ஓய்ந்தபாடில்லை.

நோர்வே அரசாங்கத்தின் அனுசரணையுடன், போர் நிறுத்த ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டு, ரணில் விக்கிரமசிங்க பிரதமாராக இருந்த காலத்தில் பேச்சுகள் நடத்தப்பட்டன. அப்போது மத்தியஸ்த்தம் சர்வதேசமாக இருந்தது. ஆனால், திடீரென வெறுமனே புலம்பெயர் தமிழர்களை வைத்துக் கொண்டு, ஒரு தீர்வுக்கான முயற்சியை மேற்கொண்டமையானது, இலங்கை அரசாங்கத்தின் வெளி நாடுகளற்ற உள்நாட்டுப் பொறிமுறைக்கான தந்திர முயற்சியாகவே பார்க்கப்படுகிறது.

வடக்கு கிழக்கிலுள்ள தமிழ் மக்களும், புலம்பெயர் தேசத்தினரும் உள்நாட்டுப் பொறிமுறையினை ஏற்றுக் கொள்ளா நிலைப்பாட்டைக் கடைப்பிடித்து வருகின்றனர். அதே நேரத்தில் 13ஆவது திருத்தம் தமிழ் மக்களுடைய அரசியல் அபிலாசைகளை முழுமையாகப் பூர்த்தி செய்யவில்லை என்றும் கூறிவருகின்றனர். இந்த நிலையில் இப்போதும் இந்த இரு விடயத்திலிருந்தும் அவர்கள் வெளியே வரவில்லை என்பது மீண்டும் ஒருமுறை சொல்லப்பட்டிருப்பதனையே இவைகள் காட்டுகின்றன.

இமயமலைப் பிரகடனம் பெரும்பான்மையான தமிழர் தரப்பினரால் நிராகரிக்கப்பட்டுள்ளன. அப்படியானால் ஜனாதிபதியின் முதல் முயற்சி, தோல்வி என்றே கருத வேண்டும். இதனை உணர்ந்து கொண்டமையினால்தான் வடக்குக்குச் சென்று, அடுத்த முயற்சி முன்னெடுக்கப் பட்டிருக்கிறது. வடக்கு விஜயம் அறிவிக்கப்பட்டது முதலே, எதிரான அல்லது எதிர்ப்பு அறிக்கைகள் பல வெளிவந்தன. போராட்டங்கள் ஏற்பாடு செய்யப்பட்டன. தடைகளும், கைதுகளும் நடைபெற்றிருக்கின்றன. இவ்வாறான பல நெருக்குதல்களுக்கு மத்தியில்தான் ஜனாதிபதியின் வடக்கு விஜயம் நிறைவுக்கு வந்திருக்கிறது. எது எப்படியாக இருந்தாலும், இவையெல்லாம் அவருடைய விடாப்பிடி முயற்சியைக் காட்டுவதாக இருக்கிறது என்றே சொல்ல வேண்டும்.

டட்லி - செல்வா ஒப்பந்தம், பண்டா செல்வா ஒப்பந்தம் எனப் பல ஒப்பந்தங்களும், பேச்சுவார்த்தைகள் பலவும், அரசியலமைப்புக்கான திருத்த முயற்சிகள் பலவும்

என நடைபெற்ற பல விடயங்கள் தொடர்ச்சியற்றுப் போனமையானது, தமிழ் மக்கள் மத்தியில் சிங்களவர்கள் மீதான வெறுப்பினை மேலும், மேலும் வலுவானதாக ஆக்கியிருக்கிறது. அந்தவகையில்தான் ஜனாதிபதியினுடைய முற்சிகளின் தார்ப்பரியங்களையும், தந்திரங்களையும் தமிழ் மக்கள் விளங்கிக் கொள்ள வேண்டிய கட்டாயம் காணப்படுகிறது.

நாட்டில் உருவான பெரும் பொருளாதார நெருக்கடிக்கு வெறுமனே 2019 உயிர்த்த ஞாயிறு தாக்குதல், 2020 கொவிட் பெருந்தொற்று போன்ற காரணங்களையே காண்பிக்க முயலுகின்ற தன்மையானது, பெரும் பூசணிக்காயைச் சோற்றில் புதைக்கின்ற முயற்சியாகும். வடக்கு, கிழக்கில் தமிழர்களை அழிப்பதற்காக, அனைத்து நாடுகளையும் ஒன்றிணைத்து, கடன் மற்றும் உதவிகளைப் பெற்று, பெரும் யுத்தம் நடத்தப்பட்டது. ஆனால், அதனால் ஏற்பட்ட பொருளாதாரக் கடுமையை மறைத்துவிட முயல்வதானது, இனப்பிரச்சினையின் கடுமையை சிங்கள மக்களிடமும், சர்வதேசத்திடமும் மறைக்கும் முயற்சியே!.

நாடாளுமன்றத் தேர்தலில் தோல்வியடைந்து, தேசியப் பட்டியல் மூலமாக நாடாளுமன்றம் நுழைவதா? இல்லையா? என்ற நிலையே ஆரம்பத்தில் காணப்பட்டது. ஆனால், நாடாளுமன்றத்திற்குள் நுழைந்த ரணில் விக்கிரமசிங்க, அதிர்ஷ்டவசமாக ஜனாதிபதியாகியிருந்தாலும், இப்போது அவர் மேற்கொண்டு வருகின்ற முயற்சிகள் பாராட்டப்பட வேண்டியவையா? என ஆராயப்பட வேண்டும். என்றாலும், பூரணமாக அவரை நம்பிவிடலாமா? என்ற சந்தேகம் தொடர்ச்சியாகக் காணப்படுகிறது. அவ்வாறானால் அவர் மேலும் தமிழர்களிடம் நம்பிக்கையைக் கட்டியெழுப்ப வேண்டிய தேவை காணப்படுகிறது என்பதே அதன் அர்த்தமாகும்.

அந்தவகையில்தான், இந்த வருடத்தில் நடைபெறும் என அறிவிக்கப்பட்டிருக்கின்ற ஜனாதிபதித் தேர்தல், நாட்டின் பொருளாதார மீட்பு, தமிழ் மக்களது பிரச்சினைக்கான தீர்வு, புதிய அரசியலமைப்பு உருவாக்கம் என பல விடயங்களைச் சீர் செய்ய வேண்டிய நிலையிலுள்ள ஜனாதிபதியின் செயற்பாடானது, கவனத்திலெடுக்கப்படுகிறது.

அதே நேரத்தில் சர்வதேசத்தினைத் திருப்திப்படுத்துவதற்கும், எதிர்காலத் திட்டமிடலுக்கும் புலம்பெயர் தமிழர்களின் பங்கு முக்கியமாக இருக்கும் என்பதனை அனுமானித்ததன் வெளிப்பாடே ஜனாதிபதியின் தொடர்ச்சியான புலம்பெயர் தமிழர்கள் மீதான இலக்காகும். எது எவ்வாறாக இருந்தாலும், தமிழர்களைத் திருப்திப்படுத்தாத புதிய அரசியலமைப்போ, சரியான தீர்வோ கிடைக்காத நிலையில், புலம்பெயர் தமிழர்களது ஈடுபாட்டுடனான வருகையோ சாத்தியமில்லை என்பது மாத்திரமே உண்மை.

இந்த இடத்தில், முழுமையாக அமுல்படுத்தப்படாத 13ஆவது திருத்தத்தின் மூலமாக தமிழர்களைத் திருப்திப்படுத்த முடியும் என்ற ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் கதைவிடல்களும், வெளிநாடுகளின் உள்நோக்கங்களுடனான உதவிகளும், கடன் வழங்கல்களும் நாட்டைக் கட்டியெழுப்பாது என்பதும் புரிந்து கொள்ளப்பட்டால் சரி.




Smt. லிதியா மயூரன், சுவிஸ்

## புஸ்பாஞ்சலி

“விக்னானாம் நாஷனம் கர்தும்
பூதானாம் ரக்ஷனாயச்ச
தேவானாம் துஷ்டயே
சாபி ப்ரேக்ஷகானாம் விபூதையே
ஸ்ரஸசே நாயகஸ் யாத்ர பாத்ர
சம்ரக்ஷ நாயச்ச
ஆச்சர்ய ஷிக்ஷா ஷிக்யர்தம்
புஸ்பாஞ்சலி மதாரபேத்”

***கருத்து :*** *இடையூறுகளை அழிப்பதற்காகவும், உயிர்களைக் காப்பாற்றுவதற்காகவும், தேவர்களை மகிழ்விப்பதற்கும், பார்வையாளர்களுடைய செழிப்பிற்கும், நாட்டியக் குருவினுடைய தலைவரின் நன்மைக்கும், நடிகையின் பாதுகாப்பிற்கும், ஆசானுடைய கல்விச் சித்திக்காகவும் மலர் தூவி, அஞ்சலி செய்ய வேண்டும்.*

## அரங்க தேவஸ் துதி

“பரத குல பாக்ய கலிகே
பாவ ரஸானந்த பரினதாகரே
ஜக தேக மோகன கலே
ஜய ஜய ரங்காதி தேவதே தேவி”

***கருத்து :*** *பரத குலத்திற்கு அதிஷ்டம் தருபவளே பாவம், ரஸம் ஆகியவற்றால் ஏற்படும் ஆனந்தம் பரிணமித்த உருவம் உடையவளே உலகம் முழுவதும் கவரத்தக்க ஒரேயொரு கலையாக இருப்பவளே வெற்றி வெற்றி அரங்கத்தின் தேவிக்கு.*



## ஆடல் முறைகள்

*பரத நாட்டியக் கலை மூன்று ஆடல் முறைகளைக் கொண்டது. அவை : நிருத்தம், நிருத்தியம், நாட்டியம் ஆகியவையாகும்.*

## அபிநயம்

*அபிநயம் என்பது கருத்தையோ, உணர்வையோ வெளிப்படுத்த உதவுவது. அபிநயத்தின் மூலம் ஒரு செய்தியை மற்றவர்களுக்கு உணர்த்தலாம். பரத நாட்டியத்தில் நான்கு விதமான அபிநயங்கள் பயன்படும். அவை*

- ஆகார்ய அபிநயம்
- வாசிக அபிநயம்
- ஆங்கிக அபிநயம்
- சாத்விக அபிநயம்

*என்பனவாகும். பரத நாட்டியத்தில் கைமுத்திரைகள் முதன்மையாகக் கொள்ளப்படும். பரத நாட்டியத்தில் பாடலின் பொருளைக் கைமுத்திரைகள் காட்டும். கை முத்திரைகள் வழி கண் செல்லும். கண்கள் செல்லும் வழி மனம் செல்லும். மனம் செல்லும் வழி உள்ளத்தின் உணர்வு செல்லும். இதனைக் கம்பர்,*

“கைவழி நயனஞ் செல்லக்
கண்வழி மனமும் செல்ல
மனம் வழி பாவமும்
பாவ வழி ரசமும் சேர.”

*எனக் குறிப்பிட்டுள்ளார். ஆங்கிக அபிநயத்தில் அங்கம், உபாங்கம், பிரத்தியாங்கம் என்னும் மூன்று சிறப்புப் பிரிவுகள் உள்ளன. இவற்றைத் திரியாங்கம் எனவும் அழைப்பர்.*

## அங்கம்

*தலை, கைகள், மார்பு, பக்கங்கள், இடை, பாதங்கள் ஆகிய ஆறும் அங்கம் எனப்படும். சிலர் கழுத்தையும் இதில் சேர்ப்பர்.*

## பிரத்தியாங்கம்

புசங்கள், முன் கைகள், முதுகு, வயிறு, தொடைகள், முழங்கால்கள் ஆகியவற்றைப் பிரத்தியாங்கம் என்பர்.

## உபாங்கம்

உபாங்கம் என்பது கண், விழி, புருவம், கன்னம், மூக்கு, தாடை, பல், நாக்கு, உதடு, முகவாய் ஆகியனவாகும்.

## சாத்விக அபிநயம்

உள்ளத்தில் எழும்பும் உணர்வுகள் காரணமாக, உடலில் ஏற்படும் மெய்ப்பாடுகளை உடல் மொழிகளால் வெளிப்படுத்துவது சாத்விக அபிநயமாகும். மெய்ப்பாடுகளை ‘நவரசம்’ என்று சொல்வர். ‘ஒன்பான் சுவை’ என்றும் சொல்வர். அச்சம், வீரம், இழிப்பு, அற்புதம், இன்பம், அவலம், நகை, கோபம், நடுநிலை ஆகிய இச்சுவைகளை மெய்ப்பாடுகளால் உணர்த்த வேண்டும். அதாவது கண்கள், உடலசைவு, உடல்நிலை ***(Posture).*** கை முத்திரைகள், முக பாவம் ஆகியவற்றால் அபிநயித்தல். இது சாத்விக அபிநயமாகும். எடுத்துக்காட்டாக அச்சமேற்படும் போது உடல் வியர்க்கும்; உடல் நடுங்கும்; கண்கள் சொருகும். இத்தகு மெய்ப்பாடுகளை ஆடலில் காட்டுதல் சாத்விக அபிநயமாகும்.

## நாட்டிய உருப்படிகள்

பரத நாட்டிய நிகழ்ச்சியில் தனிப்பட்ட நாட்டிய உருப்படிகள் உண்டு. ஒவ்வொரு உருப்படிக்கும் பெயர், தனித் தன்மை உண்டு. இவ் உருப்படிகள் ஓர் ஒழுங்கு நிரலில் இருக்கும். பரத நாட்டிய நிகழ்ச்சி ஆரம்பிக்குமுன் இறை வணக்கம் பாடுவது வழக்கம். பக்க இசையாளர் இதைப் பாடுவர். முதலில் நிருத்த வகை உருப்படிகள், அதன் பின் நிருத்திய, நாட்டிய வகை உருப்படிகள் தொடரும். உருப்படிகள்

1. அலாரிப்பு
2. சதிசுரம்
3. சப்தம்
4. வர்ணம்
5. பதம்
6. தில்லானா
7. விருத்தம்
8. மங்களம்

என்பவையாகும்.




# உளவு நிறுவனங்கள் 59

தொடர்

ஐரோப்பியப் பரப்பளவிலிருக்கும் நாடுகளில், வெளிநாட்டவர்கள் இல்லாத நாடுகளே இல்லை. அந்தந்த நாடுகளில் வேலைக்காக விண்ணப்பித்து வந்தவர்கள், அந்தந்த நாடுகளில் விஸ்தரிக்கப்பட்டுள்ள கணிணித் தொழில்நுட்பத்தோடு, பணிகளுக்குப் பணியாளர்களின் பற்றாக்குறை ஏற்பட்டு, பணியாளர்கள் தேவையென விண்ணப்பங்கள் கோரப்பட்டு வந்த பணியாளர்கள், அகதிகளாகப் புலம்பெயர்ந்து வந்தவர்கள் என வகைப்படுகின்றனர்.

இவர்கள் அனைவருமே அந்த நாடுகளில் காலம் காலமாக வாழும் தேசிய மக்கள் அல்ல. அந்நாட்டுத் தேசிய மக்களுக்குரிய தேசப்பற்றும், விசுவாசமும் வெளிநாட்டிலிருந்து வந்து, வேலை பார்ப்பவர்களுக்கோ அல்லது புலம்பெயர்ந்து அகதியாக வந்து வாழ்ந்து கொண்டு இருப்பவர்களுக்கோ இருக்கும் என எதிர்பார்க்க முடியாது.

மேலெழுந்தவாரியாகப் பார்க்கும் போது, அவர்கள் பணிபுரிந்து வாழும் நாட்டின் மீதும், அந்தச் சட்டங்களை மீறாத மனிதர்களாக வாழ்வதில், அதனைக் கடைப்பிடிப்பதில் தேசிய மக்களை ஒத்தவர்களாகத் தோன்றினாலும், அவர்கள் அந்த நாடுகளுடன் ஒட்டாதவர்களாகவே இருப்பார்கள்.

சட்டங்களுக்குக் கட்டுப்பட்டு வாழ்வதற்கும், பணியாற்றுவதற்கும், தேசப்பற்றுக்குமிடையில் பாரிய வேறுபாடு இருக்கும். சுதேசிய மக்கள் வழிவழியாய் வந்த மக்களாகையால், அவர்களுடைய மனமும், உடலும் அந்த மண்சார்ந்த வாழ்வாகவே இருக்கும். ஆனால் வெளிநாடுகளிலிருந்து ஏதோ காரணத்துக்காகக் குடியேறுபவர்கள் தங்கள் சொந்த நாட்டைப்பற்றிச் சிந்திக்காமல் இருக்க மாட்டார்கள்.

தமது சொந்த நாட்டையும், குடியேறி வாழ்ந்து கொண்டிருக்கும் நாட்டையும் ஒப்பிட்டுப் பார்ப்பார்கள். இவர்களை இரண்டு தோணியில் கால் வைப்பவர்கள் என்று சொல்லலாம். இவர்களிடம் வாழும் நாட்டின் மீதான தேசியப் பற்றை எதிர்பார்க்கவே முடியாது. வாழும் நாட்டின் சட்டங்களுக்கு இவர்கள் கட்டுப்படுகிறார்கள் என்பதை வைத்து, இவர்கள் தேசியப் பற்றாளர்கள் என்று எடை போட முடியாது.

சட்டங்களை மீறும் போது, அதனால் கிடைக்கும் தண்டனைகளுக்குப் பயந்துதான் இவர்களைப் பார்க்கும் போது, சட்டங்களை மதிப்பவர்கள் என அவர்களின் வெளிநடவடிக்கைகள், இவர்களைப் பற்றிய பொது அபிப்பராயத்தை ஏற்படுத்தினாலும் உண்மை அதுவல்ல.



வாழும் நாட்டில் கிடைக்கும் பணத்தின் பெறுமதி, தமது சொந்த நாட்டின் பணப் பெறுமதியை விட பல மடங்காகும் என்பதாலும், இத்தகையவர்கள் ஒரு கானல்நீர் தோற்றத்தைக் கொண்டவர்களாகவே இருப்பார்கள். இத்தகையவர்களை இலக்கு வைப்பதே உளவு நிறுவன ஒற்றர்களின் முக்கிய வேலையாகும். தத்தமது சொந்த நாட்டில் ஏற்படும் வன்முறைகளாலோ அன்றி, இயற்கை அனரத்தங்களாலோ ஏற்படும் பொருளாதார அழிவு, தொட்டு உயிரழிவு போன்றவை எற்படும் போது, அதையிட்டு இவர்கள் கவலையடைவார்கள். ஆனால், தாம் வாழும் நாட்டில் ஏற்படும், அந்நாட்டினைப் பாதிக்கும் விளைவுகள் பற்றிக் கவலைப்படவே மாட்டார்கள்.

இன்னும் இவர்களின் சொந்த இடத்தில் ஏற்படுமானால், மிகுந்த கவலையடைவார்கள். அரசுக்கெதிரான வன்முறைகளின் பங்காளர்களாக இவர்களின் உறவினர்களோ, நண்பர்களோ இருக்கும் பட்சத்தில், அவர்களுக்கு ஆதரவாக தமது கருத்தினை முன் வைக்கும் இவர்கள், இவற்றுக்கெல்லாம் காரணம் உளவு நிறுவனங்கள் என குற்றஞ்சாட்டுவார்கள்.

இவர்களின் சொந்த நாட்டில் எந்த உளவு நிறுவனம் அரசுக்கெதிரான வன்முறையை உருவாக்கி, வன்முறைப் புரட்சியாளர்களைத் தூண்டிவிட்டதோ, அதே உளவு நிறுவனம் இவர்கள் வாழும் நாட்டில் அரசுடன் இணைந்து செயல்படுவார்கள்.

உளவு நிறுவனங்களின் செயல் திட்டங்கள் நாட்டுக்கு நாடு வேறுபடும். ஒரு நாட்டில் அரசுக்குச் சார்பாக தமது உளவு வேலை நகர்வைச் செய்யும் உளவு நிறுவனம், இன்னொரு நாட்டில் அரசைக் கவிழ்க்கச் சதி செய்யும். ஒரு அரசைத் தக்க வைப்பதற்கு ஆதாரமாக இருப்பது பொருளாதாரமே!.

ஒரு நாட்டின் அரசைக் கலைத்து, தனது சொற்படி கேட்கிற அரச நிர்வாகத்தைக் கொண்டு வருவதற்கு, தனது உளவு நிறுவனத்தின் மூலம் அத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கு அந்நிறுவனத்துக்குச் சாதகமாக இருப்பது வலுவிழந்த பொருளாதாரக் கட்டமைப்பேயாகும்.

இறக்குமதி வழியாக மட்டுமே தனது நாட்டு மக்களின் தேவையைப் பூர்த்தி




செய்வதில் தங்கியிருக்கின்ற அரசு, ஒரு போதும் நிரந்தரமான அரசாக இருக்க முடியாது.

நவீன தொழில் வளர்ச்சியடைந்த நாடுகளில், வெளிநாடுகளிலிருந்து வந்து பணியாற்றுவோர் தாங்கள் பணியாற்றும் திணைக்களங்களிலிருந்தோ, தொழிற்சாலைகளிலிருந்தோ இரகசியங்களைத் திருடுபவர்களாகவும் இருப்பார்கள்.

உளவு நிறுவனங்கள் ஒட்டுமொத்தமாக ஒரே மாதிரி செயல்படுபவை அல்ல. ஒரு நாட்டில் அரசுக்கெதிரான புரட்சியில், புரட்சிவாதிகளுக்குச் சார்பாக இருந்து கொண்டு, அவர்களைத் தூண்டிவிடும் உளவு நிறுவனம், இன்னொரு நாட்டில் அரசுக்குச் சார்பாக இருந்து கொண்டு, அரசுக்கெதிரான புரட்சியாளர்களை நசுக்க ஆலோசனை வழங்குவதுடன், ஆயுத உதவிகளையும் செய்யும்.

அதே உளவு நிறுவனம் இன்னொரு நாட்டின் அனைத்து வளங்களினதும் கட்டமைப்பின் நுட்பமான இரகசியங்களைத் திருட என்னவெல்லாம் செய்ய வேணுமோ அவற்றைச் செய்யும்.

உதாரணமாக, ஒரு அரசு தனது அரச நிர்வாகத்தையும் நடத்திக் கொண்டு, மக்களின் அன்றாட வாழ்வுக்குத் தேவையானவற்றை வழங்கிக் கொண்டும், அதே வேளை தனது நாட்டில் நடைபெற்றுக் கொண்டிருக்கும் உள்ளகப் புரட்சியோ அல்லது இன்னொரு நாட்டுடனான போராகவும் இருந்து, அதனால் ஏற்படும் பெரும்பாதிப்புக் காரணமாக ஏற்படும் பெரும் செலவு மட்டுந்தான் அந்நாட்டைச் சிதைக்கும் பொருளாதார அபாயம் அல்ல.

சாதாரணமாக ஒரு நகரத்தில் வன்முறையாளர்களால் சேதப்படுத்தப்படுகின்ற பேருந்து நிலையக் கண்ணாடிகளின் சேதமும் பொருளாதார நட்டமாகும்.

சில நாடுகளில் இறக்குமதிகளை நம்பி இருக்கின்றவெனிலும், அந்நாடுகள் அதற்கு ஈடாக அல்லது அதனால் ஏற்படும் வெற்றிடத்தைத் தனது நாட்டில், வேறு நாடுகள் வரியில்லாமல் தொழிற்சாலைகளை அமைப்பதற்கு இடம் கொடுத்தும், அத்தொழிற்சாலைகளின் உற்பத்திகளை வேறு நாடுகளுக்கு ஏற்றுமதி செய்கின்ற சந்தையாகவும் இருந்து வருகின்றன.

இத்தகைய நாடுகள் தமது நாட்டுக்குள் உளவு நிறுவனங்களின் தலையீடுகளை, மிக நுட்பமாகத் தடுத்து வருகின்றன. தமது அரசு அமைச்சர்கள், அதிகாரிகள் தொடங்கி, அமைச்சகளின் இறுதிச் செயல்பாடுகளில் ஈடுபட்டுக் கொண்டிருப்பவர்கள், திணைக்களங்களின் கடைநிலைப் பணியாளர்கள், அவர்கள் உளவு நிறுவனங்களின் ஒற்றர்களாக இயங்குகிறார்களா? என்பதை அவர்களறிந்து கொள்ளாத வகையில் கண்காணித்து வருகிறார்கள்.

இன்னும் குறிப்பாக நாட்டின் பாதுகாப்பை உறுதிப்படுத்துகின்ற இராணுவம், காவல்துறை போன்றவற்றை ஒவ்வொரு விநாடியும் அரசு கவனித்துக் கொண்டேயிருக்கும்.

ஏந்த அரசு ஆட்சியிலிருந்தாலும், ஆட்சிக்கு ஆட்சி கண்காணிப்புத் திட்டத்தில் மாற்றம் இருக்காது. கண்காணிப்பதில் கண்காணிப்பு அடுக்குகள் ஒன்றுக்கு மேற்பட்டவையாக இருக்கும். உளவு நிறுவனங்களைக் கவனிக்க ஏற்படுத்தப் படுகின்ற இரகசிய கண்காணிப்புப் பிரிவையே கண்காணிக்க, இன்னொரு பிரிவு ஏற்படுத்தப்பட்டிருக்கும்.

அனைத்துத் துறையிலும் வளர்ச்சியடைந்த நாட்டிலேயே நூறுபேர் கொண்ட கூட்டத்தில், ஆகக் குறைந்தது ஐந்து இரகசியக் காவல்துறைக் கண்காணிப்பாளர்கள் சாதாரண பொதுமகனாக கண்காணிப்பில் ஈடுபட்டுக் கொண்டிருப்பர்.

**தொடரும்**




CHOLAN

# சோழன் பொருட்களின் விநியோகஸ்தகர்

**DORTMUND மாநகரத்திலே**
**தாயக மரக்கறிகள், பழ வகைகள்**
**மற்றும் உணவுப்பொருட்களை**
**மொத்தமாக பெற்றுக் கொள்ள**
**நாடுங்கள்**




StaR-Impex




## Lebensmittel Grosshandel e.K.

Franziustr.150 (TOR 3) DE - 44147 Dortmund
Tel : 0231 / 8602696 Fax : 0231 / 8602698
email : info@star-impex.de
web : www.star-impex.net

**இன்பம் பொங்கும்**
**தமிழர் திருநாள்**
**நல்வாழ்த்துகள்**

கல்லெறி வேலுப்பிள்ளை

# “என்ன கொடுமை சரவணா!”



## வணக்கம் பாருங்கோ, எப்பிடி சுகமா இருக்கிறியளே...?

**வருசமும் முடியப்போகுது கண்டியளோ, இன்னொரு ஆண்டு கணக்கில சேர்க்கப்படப்போகுது. காலம் போற வேகத்தில எதை எப்பிடிச் சமாளிக்கிறது எண்டு தெரியேல்லை பாருங்கோ.**

புதுசு புதுசா போர்கள், புதுப்புது நோய்கள், புதுப்புது மருந்துகள், எண்டு இந்த உலகம் அழிவை நோக்கித்தான் போய்க்கொண்டிருக்குது பாருங்கோ. இது எல்லாத்திலையும் தப்பி எழுந்து வாறதே ஒரு உலக சாதனை தான் பாருங்கோ.

இது ஒரு பக்கம் நடக்குதெண்டால்; எங்கட இனத்துக்குள்ள நடக்கிற கூத்துக்கள் வேற விதமான அழிவைத் தாற கூத்துக்களாக் கிடக்கு கண்டியளோ. ஒருத்தனை ஒருத்தன் கடிச்சு விழுங்குற நிலைமையாகக் கிடக்கு பாருங்கோ. ஆர் ஆரோ கண்டது நிண்டதுக்கெல்லாம் உரிமை கோரி நிக்குறான். எல்லாருமே கடவுளா மாற நிக்குறான் கண்டியளோ. எவன் சொல்லுறது பொய் எவன் சொல்லுறது உண்மை எண்டு தெரியாத அளவுக்கு குழப்புறாங்கள். பெரிய தலையிடியா கிடக்கு பாருங்கோ.

விசயம் என்னவெண்டா பாருங்கோ; சோத்துமூட்டை ஒண்டு முன்னுக்குப் பின் முரணான செய்திகளைப் பரப்பிறதோட மட்டுமில்லாமல், ஏதோ தமிழீழ விடுதலைப்போராட்டம் தன்னுடைய ஆலோசனையில மட்டும்தான் இயங்கின மாதிரி அலப்பறை பண்ணுது கண்டியளோ. இப்பவெல்லாம் அலப்பறை பண்ணுறதுகள் தானே எல்லாத்துக்கும் தலைமை தாங்குதுகள் பாருங்கோ.

அதோட இன்னொரு பெரிய பகிடி என்னவெண்டால்; தலைவர் கடைசிவரைக்கும் தன்னுடைய இலட்சியத்துக்காக நின்று போராடி வீரச்சாவடைஞ்சார் எண்டுறதை இவ்வளவு காலமும் மறைச்சவன் எல்லாம் இப்ப வெளியில வந்து தன்ர வாயால வாக்குமூலமாகச் சொல்லுறான் பாருங்கோ. அதுக்காகவாவது போனமாசம் வந்து போலி நாடக உரை நிகழ்த்தின அம்மணிக்கு நன்றி சொல்லவேணும் கண்டியளோ.

இஞ்ச 'தலைவர் வாறார்' எண்டு காசு சேர்த்தவை பற்றி அறிஞ்சிருப்பியள் தானே. அது ஒரு பக்கத்தால நடந்த நேரம்; இஞ்ச ஏற்கனவே காசு குடுத்து நல்ல கடுப்பில இருந்த ஒருத்தரிட்ட "தலைவரின்ர மகள் எண்டு சொல்லிக் கொண்டு வந்த போலி என்னவாம்?"எண்டு கேட்டன். ஆள் என்ன கோபத்தில இருந்ததோ வேட்டைநாய் மாதிரி எகிறிப்பாஞ்சுது கண்டியளோ. பொறப்பா , ஏன் என்னில பாயுறாய் எண்டு கேட்டன். அதுக்கு ஆள் சொன்ன பதிலை வைச்சு பகுதி பகுதியா ஒரு புத்தகமே எழுதலாம்.

என்னவெண்டா பாருங்கோ; முதலில ஐரோப்பாவில உள்ள ஒரு நாட்டில இருந்துதானாம் இவரைத் தொடர்பு கொண்டவங்கள். தொடர்புகொண்டது மட்டுமில்லை; உங்கட மைத்துனர் பற்றி உங்களுக்குத் தெரியும், அவரும் ஆப்பிரிக்காவில ஒரு இடத்தில உயிரோட இருக்கிறார் எண்டாங்களாம். இவரின்ர மைத்துனர் ஒருத்தர் முள்ளிவாய்க்காலில இராணுவத்தால இறுதிநேரத்தில கைதுசெய்யப்பட்டு இண்டு வரைக்கும் எங்க எண்டு இல்லை. அவர் நிர்வாகசேவையில ஒரு பகுதிக்கு பொறுப்பா இருந்தவராம் பாருங்கோ. அதைத் தெரிஞ்சு கொண்ட 'தலைவர் வாறார்' கூட்டம், மைத்துனரை வைச்சுத் தான் இவருக்கு வலை விரிச்சிருக்கு பாருங்கோ. தலைவரின்ர கட்டளைப்படிதான் இவரின்ர மைத்துனர் ஆப்பிரிக்காவில ஒரு அணியோட காத்திருக்கிறதாகச் சொன்னாங்களாம். இவர் அதை நம்பவும் முடியாமல், கெம்பவும் முடியாமல் முதலில ஆயிரம் யூரோ கொடுத்திருக்கிறார் கண்டியளோ. காசு குடுத்த மறுநாளே; தலைவர் நன்றி சொன்னவர் எண்டு குறுஞ்செய்தி அனுப்பினாங்களாம். உங்களை கெதியில தலைவரோட சந்திக்க வைப்பம் எண்டு சொன்னவங்கள் தானாம், அதுக்குப் பிறகு அந்த இலக்கத்துக்கு அழைச்சால் பதிலே இல்லையாம்.

கொஞ்ச நாளுக்கு பிறகு வேறொரு இலக்கத்தில இருந்து எடுத்தாங்களாம். இன்னும் கொஞ்சம் நிதி உதவி எண்டு இழுக்க; நம்மட ஆள் கடுப்பாயிட்டுது. நான் தலைவரைச் சந்திக்காட்டிலும் பரவாயில்லை, என்ர மைத்துனரோட கதைக்கவேணும் எண்டு கேட்டிருக்கிறார். அவர் நடவடிக்கை ஒண்டைத் திட்டமிட வேற ஒரு நாட்டுக்கு போயிருக்கிறதாகவும், வந்தவுடனே தொடர்பு கொள்ளச் சொல்லுறதாகவும் சொல்லிப்போட்டு தொடர்பைத்துண்டிச்சிட்டாங்களாம்.

பிறகு திரும்பவும் இவர் அந்த இலக்கத்துக்கு எடுத்தால் பதில் இல்லையாம் பாருங்கோ. ஒரு கிழமை போக; திரும்ப ஒரு குறுஞ்செய்தி அனுப்பினங்களாம். என்னவெண்டால்; தலைவர் உடல்நலம் குன்றி இருக்கிறதால,



இனி அவரின்ர மகள்தான் எல்லாத்தையும் கவனிப்பா எண்டு அதில எழுதியிருந்துதாம். அப்பதான் நம்மட ஆளுக்கு கொஞ்சம் பொறிதட்டத் தொடங்கியிருக்கு கண்டியளோ. மகள் எண்டால் இவ்வளவு நாளும் எங்க இருந்தவ எண்டு யோசிச்சுக் கொண்டு இருந்தவருக்கு கொஞ்சம் கொஞ்சமாக உந்தக் கூட்டத்தில நம்பிக்கை குறையத் தொடங்கீட்டுது பாருங்கோ. ஏனெண்டால் தலைவர் 'குடும்ப ஆட்சி' செய்யுற ஆள் இல்லை எண்டுறது உலகத்துக்கே தெரியும் பாருங்கோ.

இது ஒரு பக்கத்தால போய்க் கொண்டிருக்க, 'போலி மேடையேறிய' நாடகம் நடந்து முடிஞ்சுது எல்லாருக்கும் தெரியும் தானே பாருங்கோ. அதுக்குப்பிறகு போலி நாடகத்தை நியாயப்படுத்துற மாதிரி சோத்துமூட்டை ஒரே ஒளிப்பதிவாக போட்டுத் தள்ளுது கண்டியளோ. நம்ம ஆளுக்கு அந்த ஒளிப்பதிவுகளைப் பாக்க நல்லாக் கடுப்பேறிட்டுது பாருங்கோ. காசு குடுத்து ஏமாந்தவனுக்கு கோபம் வாறது இயல்புதானே கண்டியளோ. அந்த சோத்துமூட்டையின்ர தொலைபேசி இலக்கத்தை எப்பிடியோ எடுத்து ஆள் கண்டபடி கிழிச்சிருக்கு. ஆனால் சோத்துமூட்டை அதுக்கெல்லாம் அஞ்சுற மாதிரித் தெரியேல்லையாம் கண்டியளோ. அதுக்கும் மேலால அந்தச் சோத்து மூட்டை இன்னொரு விசயத்தையும் சொல்லிச்சுதாம் கண்டியளோ. "இவதான் தலைவரின்ர மகள் எண்டு காலம் முழுக்கச் சொல்லிக்கொண்டே இருப்பம், அதுதான் எங்கட வேலை, நீங்கள் நம்பி காசு குடுத்ததுக்கெல்லாம் நான் பொறுப்பில்லை" எண்டிச்சுதாம் பாருங்கோ. காசு குடுத்து ஏமாந்தவருக்கு ஆரைப்பிடிச்சுக் கேள்வி கேக்குறதெண்டே தெரியாமல் அலையிறது பெரும் பாவம் கண்டியளோ. அதுமட்டுமில்லாமல், பதின்நான்கு வருசமாக எங்க எண்டே தெரியாத மைத்துனரை வைச்சு காசு பறிச்ச உந்தக்கூடத்தின்ர நடத்துநர் ஆர் எண்டும் கண்டுபிடிக்க முடியாமல் அவர் படுற பாடு பெரும்பாடு பாருங்கோ.

மண்ணுக்காக, மக்களுக்காக தங்கட உயிரை அர்ப்பணித்த தலைவரையும், போராளிகளையும் வைச்சு காசு பார்க்கிற கூட்டத்தின்ர நடத்துநர் ஆரெண்டு தெரியேல்லை கண்டியளோ. ஆனால் அவங்களுக்கு உடந்தையா, இந்தியாவிலயும் ஐரோப்பாவிலையும் இருந்து காணொளி வாயிலாக பொய்யைப் பரப்புறது ஆர் எண்டு எல்லாருக்கும் தெரியும் பாருங்கோ. இப்படியான கழுசறைகளை முதலில ஒழிக்கவேணும் பாருங்கோ. அதுக்கு முதல்; திக்குத் திக்காக இருந்தபடி, 'நானும் போராளிதான்' எண்டு காணொளி வாயிலாக கதையளக்கிற எல்லாரும் ஒன்றுபட வேணும் கண்டியளோ. ஆனால் இவையள் ஒண்டுபடுற மாதிரி தெரியேல்லை பாருங்கோ. போலிக்கூட்டமும், போராளிக் கூட்டத்தினரும் மாறி மாறி காணொளி வெளியிடுறதிலதான் போட்டி போடுகினமே தவிர, மக்களை ஆற்றுப்படுத்துற எந்த வேலையும் செய்யுற மாதிரித் தெரியேல்லை பாருங்கோ.

காலம் உண்மைகளை வெளிக்கொணரும் பாருங்கோ. அதுவரைக்கும் தமிழீழ விடிவிற்கான போராட்டத்தைக் கட்டி வளர்த்த ஈழத்தமிழ் மக்கள் அமைதியாக இருக்கிறதுதான் ஒரே வழி பாருங்கோ.

**"எறும்புத் தோலை உரித்துப் பார்க்க**
**யானை வந்ததடா - நான்**
**இதயத் தோலை உரித்துப் பார்க்க**
**ஞானம் வந்ததடா**
**பிறக்கும் முன்னே இருந்த உள்ளம்**
**இன்று வந்ததடா**
**இறந்த பின்னே வரும் அமைதி**
**வந்து விட்டதடா."**

- அப்ப வரட்டே



வாடிக்கையாளர்களின்
பேராதரவுடன்
21ஆம் ஆண்டில்....
SK
SINCE 2003
S.K. Silks &
Gold Paradise
ADLER STR. 33, 44137
DORTMUND
Tel : 0231 9501647
Fax : 0231 9501648
மாபெரும்
ராஜ
முத்திரை
இன்பம் பொங்கும்
தமிழர் திருநாள் நல்வாழ்த்துகள்

# உள்ளம்
## திறக்கும் உண்மைகள்

அகர கவிக்களம்....

### முகமூடி

சூனியத்தின் சூட்சமும்
வாழ்கையில்
வளைவு நெளிவு
தெரிந்தவர்கள் தான் !

நேரத்துக்கு நேரம்
மூகமூடி மாட்டிக்கொண்டு
அழவைத்து ரசிப்பார்கள்
எப்பொழுது எது
தேவைப்படும்
என்பது எதிரே
உள்ளவர் முடிவில்
சாதகமாக்கி
மாயமுக மூடியில்
முகம் மாற்றும்
திறன்உள்ளவர்கள் !

நிறம் மாறும்
பஞ்சோந்தியை விட
கொடியவர்கள்
முகம் மாற்றும்
சிலபேர் !

“உள்ளம் திறக்கும் உண்மைகள்...” என்ற தலைப்பில்
உங்கள் மனதிலிருந்து புதிய சிந்தனைகளை
4 - 6 வரிகள் கொண்ட கவிதையாக்கி எமக்கு அனுப்பி வையுங்கள்.

### பூமி

இழிசொல்லில்
இயன்ற அளவு
பேசினாலும் கூட
பழி சொல்
என்று எண்ணாமல்
பாரம் சுமக்கும் பூமி
தன் பணியினை
நிறுத்துவதில்லை!



### மனிதம்

நம்பமுடியவில்லை.
ஆனால், இதுதான் உண்மை
இவ்வுலகத்தில் நாம்
இழந்து கொண்டிருப்பது மனிதம்.

பகைமை உணர்வு இல்லா உள்ளம்
ஒற்றுமை உணர்வு உள்ள இதயம்
உண்மை உலவும் உள்ளம்
தன்னலம் கருதாத மனம்
எம்மதமும் சம்மதம் என ஏற்கும் மனம்
எங்கே காண்பது இவ்வுலகில்.

**- நந்தினி, இலண்டன்**



### பாரினிலே மகிழ்வாய்

கதைகேட்கும் நல்லுலகம்
காலமதை நிர்ணயிக்கும்
வாலிபத்தை வாழவிடும்
வாழ்வினிற்கு உதவிவிடும்
சோர்வில்லா நிலையதனை
தோற்றுவித்தே வெற்றிபெறும்
பார்புகழும் இவ்வேளை
பாரினிலே மகிழ்வாமே!

**- கெங்கா ஸ்ரான்லி**

## சாதித்தல்

நீ ஊனமில்லாமல் பிறந்தது
இந்தப பூமியில் நீ சாதிக்க
இறைவன் கொடுத்த
சந்தர்ப்பம்தான்
அதை நீ சரியாகப்
பயன்படுத்துவதும்
பாழ்படுத்துவதும்
உன் கையில் தான்!

## இதுவும் கடந்து போகும்

எத்தனை வெற்றிகள்
எத்தனை தோல்விகள்
எத்தனை மகிழ்ச்சிகள்
எத்தனை துக்கங்கள்
எல்லாம் வந்து
சிறிது காலம் தங்கி
கடந்து போயிருக்கின்றன.
வந்ததெல்லாம்
நம்மை விட்டு போவதால்
நம்முடையதல்ல என்று
உறுதியாகின்றதல்லவா.?

## ஆறுதல்

அடியே படாமல்
வலிக்க செய்வது
வார்த்தைகள் மட்டுமே
மருந்தே இல்லாமல்
காயத்தைக குணப்படுத்துவது
அன்பான ஆறுதல் மட்டுமே!



## தலைவிதி

எப்போதும்
அச்சத்தில் இருப்பதை விட
ஆபத்தை ஒருமுறை
சந்திப்பதே மேல்
இந்த உலகில் தலைவிதி என்று
எதுவும் கிடையாது
எல்லாம் நீயாகத
தேடிக்கொண்டது தான்!

## வெற்றி

தூக்கியெறியப்படும்
சந்தர்ப்பங்களில்
சிறகை விரிக்கக் கற்றுக்கொள்..!
ஒரு நாள் வெற்றி
வானம் தொட்டு
உன் இலட்சியங்கள் அடையலாம்.

## தை

இமை திறப்பது இருள் அகல
இசை பிறப்பது மருள் விலக
மேகம் திறப்பது மழை பெருக
மேன்மை பிறப்பது உயர்வு அடைய
கை பிறப்பதோ உதவி செய்ய
இந்தத் தை பிறந்ததே நல்வழி பிறக்க.

## தேநீர்

காலை எழுவதும்
அவன் கண்களில்
மாலை முடிவதும்
அவன் இதழ்களில்
அவன் கதகதப்பான
அணைப்பில்
கட்டில் மயக்கமதை
மறந்திடுவேன்! - அவன்
விரல் தொட்டு நகர்கையில்
விரதங்கள் அத்தனையும்
முடித்திடுவேன்!!
குளிர்கால போதையின்
தேவை அவன்!!

மனோ

# கறுப்புக் கோட்டுகளும் திருடர்கள் கூட்டமும்!



இந்தப் படத்தில் உலகத் தமிழர் பேரவையின் தலைவைராகக் கூறப்படும் இலண்டன் வாசி சுரேன் சரேந்திரநாதன், சுமந்திரனுடன் இணைந்து இலங்கை அரசியலில் களமாட வந்திறங்கி உள்ளார். தனி மரமாக தன் சொந்தத் தந்திரத்தால் கோட்டபாயாவின் பதவியில் தற்காலிகமாக அமர்ந்து கொண்டு, தேர்தலைக் கட்டாயமாக வெல்ல வேண்டிய கட்டாயத்தில் இருக்கிறார் ஜனாதிபதி ரணில் விக்கரமசிங்க.

எந்தத் தொகுதியிலும் வெல்லமுடியாத ரணிலை, வெல்ல வைக்கப் போவது யார்? பராளுமன்ற உறுப்பினர்கள் மத்தியில் நடந்த வாக்கெடுப்பில், ரணிலை வெல்ல வைத்தவர்கள் தமிழ்ப் பிரதிநிதிகள் என்ற இரகசியத்தை ரணிலே சொன்னதால், தமிழ் அரசுக் கட்சியின் இரட்டை வேடம் அம்பலமானது. அப்போதும் சுமந்திரன் முக்கிய பங்கைச் செலுத்தினார் என்பது பகிரங்க இரகசியம்.



ரணில் சந்திக்கப் போகும் ஜனாதிபதி மற்றும் பாராளுமன்றத் தேர்தல்களில் வெற்றி பெற்றால் மட்டுமே, அவரின் ஜனாதிபதி பதவி அவருடன் இருக்கும். இல்லாவிட்டால் பிளாட்பாரம்தான் அவரது அரசியல் எதிர்காலம்.

மகிந்தர் குடும்பத்தின் ஆதரவு இல்லாமல், ரணில் எந்தத் தேர்தலிலும் வெல்ல முடியாது. அத்துடன் தமிழ் மக்களின் ஆதரவும் தேவை. மகிந்த குடும்பம் பறி கொடுத்த ஆட்சி அதிகாரத்தை மீளப் பெறுவதையே குடும்பக் கௌரவமாக நினைத்து, தேர்தலைச் சந்திக்கத் தயாராக நிற்கிறது.

சுமந்திரன், சுரேன் கூட்டு ரணிலை வெற்றி பெற வைக்க உருவான கில்லாடிகளின் கூடாரமாக மாறி, சிங்களப் பிக்குகளை இரகசியமாகப் பாத பூசை செய்து, எங்கோ இமயமலைச் சாரலில், இமாலயப் பிரகடனம் என ஒன்றை பறைசாற்றி, இலங்கையில் சிங்களப் பிக்குகளையும், தமிழ் ஐயர்மார்களையும் இணைத்து, தமிழர்களின் 76 வருட அரசியல் அபிலாசைகளையும் சாம்பலாக்கி, அந்தச் சாம்பல் மேட்டில் ஐக்கிய மக்கள் கோபுரத்தைக் கட்டி எழுப்பப் போகிறார்களாம்.

அதைத்தான் நல்லூர்க் கந்த சுவாமி ஆலயத்தில், இந்த ஆண்டிகளின் மடம் அத்திவாரம் போட்டதாகப் பத்திரிகைச் செய்தி கூறுகிறது.

தமிழ் இனம் இன்னமும் தனது அரசியல் தலைமைகளைப் பற்றி விமர்சிக்காமல், அவர்களின் துரோகங்களை அம்பலப் படுத்தி, சிங்களம் இந்த வருடத் தொடக்கத்தில் சிங்களத் தலைவர்களை



அடித்து விரட்டியது போல அடித்து விரட்டாமல், தனது இருப்பை உறுதி செய்ய முடியாது. எங்கள் தலைவர்களின் முக்கியமான சிறப்புத் தகுதியாக கறுப்புக் கோட்டும், சட்டக் கல்லூரிப் படிப்பும் பார்க்கப்பட்டது. தேர்தலில் வெற்றி பெற்றதும், சட்டக் கல்லூரியில் சேர்ந்து சட்டத்தரணி பட்டம் பெறுவதே பலரின் இலட்சியமாக இருந்தது.

நாட்டின் செல்வங்களையும், தமிழரின் உயிர்களையும் கொன்று குவித்த சிங்களப் பேரினவாத அரசுகளுக்குத் தமிழ் தலைவர்களும் பொறுப்பை ஏற்று, மக்களுக்கு பதில் சொல்லக் கடமைப் பட்டவர்கள். ஆனால், அவர்கள் கள்ள மவுனம் காத்து நாடும், மக்களும் பிச்சைக்காரர்கள் ஆக்கியதில் உள்ள தார்மீகப் பொறுப்பை ஏற்க மறுத்து, எல்லாப் பழிகளும் சிங்களத் தலைவர்கள் மீதே எனக் கூறித் தப்பிக்கிறார்கள்.

1956இன் தொடக்கம், இன்றுவரை தமிழ் மக்கள் எதிர்நோக்கிய எல்லாத் துன்பத் துயரங்களுக்கும், இலங்கைத் தமிழரசுக் கட்சிதான் முழுப் பொறுப்பையும் ஏற்க வேண்டும். குறிப்பாகத் தமிழ் தேசியக் கூட்டமைப்பும், அதன் தலைவர் சம்பந்தனும் போரின் பொழுது செய்த காட்டிக் கொடுப்புகளும், நம்பிக்கைத் துரோகமும் மன்னிக்க முடியாதவை.

இன்று அவரால் தமிழ் அரசுக் கட்சிக்குள் கொண்டு வரப்பட்டு, அதன் தலைமைப் பதவிக்குப் போட்டி இடும் மதியாபரணம், ஆபிரகாம், சுமந்திரன் ஐக்கிய தேசியக் கட்சியின் ஆயுட்கால உறுப்பினர், இப்படிப்பட்ட ஒருவர் தமிழ் அரவுக் கட்சிப் பதவிக்குப் போட்டி இடுகிறார் என்றால், அது அரசியல் விபச்சாரம் இல்லையா? இந்தக் கேவலமான அரசியலைச் செய்யும் சுமந்திரனும், தமிழ் அரசுக் கட்சியும் தமிழரை வழி நடத்த என்ன யோக்கியதை இருக்கு?



இவர்களுக்கு மத்தியில் ஒரு வெள்ளைப் புறா எங்கிருந்து, எதற்கு வந்து? பகுந்தது எனத் தெரியவில்லை.

யார் யாரோ எல்லாம், திறந்த வீட்டுக்குள் ஏதோ வருவது போல வருகிறார், பார்க்கிறார், போகிறார். தலைவன் இல்லாத நாடும், வீடும் அப்படித்தான் இருக்கும் என்கிறார்கள். தமிழ் ஈழத்தின் கதையும், கதியும் இப்படியா இருக்க வேண்டும்? சிந்திப்போம் செயற்படுவோம்.

ஆய்வாளர் சேது, அமெரிக்கா

**பாகம் : 40**

அண்மையில் ஒரு பத்திரிகையாளர் அளித்த நேர்காணலை பார்க்க நேர்ந்தது. அவர் “புலிகள் அந்தத் தவற்றைச் செய்து விட்டார்கள், இதைச் செய்துவிட்டார்கள். அதனால்தான் அழிவு ஏற்பட்டது” என்று கூறுகிறார். இது முதல் தடவை கேட்பதல்ல, பலமுறை, பலர் பேசக் கேட்டிருக்கிறேன். பார்ப்பதற்கு, கேட்பதற்கு இதுபோன்ற வாதங்கள் பலருக்குச் சரியாகத் தோன்றினாலும், இதில் பல பிழைகள் உள்ளன. இக்கட்டுரையில் முதலில் இவ்வாறான ஆய்வுகளில் உள்ள தவறு என்ன? என்பதையும், எது சரியான ஆய்வு முறை? என்பதையும் பார்ப்போம்.

1. போர் என்பது, யார் வெற்றி பெறுவார்? என்று எளிதில் நிர்ணயிக்க முடியாதது. இது போரியலில் அடிப்படைப் பாடம். போர் என்பதே இரு சாராரும் தாங்கள் வெற்றி பெறுவோம் என்று நம்பித்தான் போர் புரிகின்றனர். உதாரணமாக இந்தியா, புலிகளிடம் தோற்றது. அமெரிக்கா, வியட்நாமில் தோற்றது என்ற போர் வரலாறு ஏராளம். போரின் முடிவை நிகழ்தகவால் மட்டுமே குத்து மதிப்பாகக் கூறமுடியும், உறுதியாகாக் கூறமுடியாது. ஒருவருக்கு 90% வெற்றி வாய்ப்பு இருக்கிறது என்றாலும், அவர் தோற்க மாட்டார் என்று எந்த உறுதியும் இல்லை. அப்படி இருக்க, புலிகளின் சில செயல்களால் தோற்றார்கள் என்ற வாதம் சரியானது அல்ல. அவர்கள் எதைச் செய்திருந்தாலும், செய்யாமல் இருந்திருந்தாலும் உறுதியான வெற்றி என்பது இல்லை.

இரட்டைக் கோபுரத் தாக்குதல் நடக்காவிட்டாலும், புலிகள் வென்றிருப்பார்கள் என்று உறுதியில்லை. இதைப் புலிகள் உணர்ந்துதான் வெற்றி பெறுவோம் என்று எந்தக் கால நிர்ணயமும் வைக்கவில்லை. புலிகள் தவறே செய்யவில்லை என்று நான் கூற வரவில்லை, ஆனால் “இதனால்தான் புலிகள் தோற்றார்கள்” எனும் வாதத்தை மறுக்கிறேன். மேலும், போர்களில்தான் தவறுகள் அதிகமாக ஏற்படுகிறது. இது அனைத்து இராணுவங்களுக்கும் ஏற்படும் ஒன்று. ஏனெனில் போரின் போக்கு என்பது கட்டுப்படுத்த முடியாத ஒன்று.

2. “மனித மூளை சிக்கலான நிகழ்வுகளை எளிதில் பார்த்து, புரிந்து

# தமிழீழ விடுதலைப் போரும், கற்றுக்கொண்ட பாடங்களும்



கொள்ள முடியாது. அதனால் அது ஏற்பட்ட நிகழ்வுகள் சிலவற்றை எடுத்து, ஒரு கதையைக் கட்டிவிட்டுப் புரிந்து கொள்ள முயலும். இது கதைப் போலி ***(Narrative Fallacy)***” என்கிறார் இடங்கன் வாட்சு. இன்று போர் முடிந்தபின்னர், அதைப் பின்னோக்கிப் பார்த்து, இதனால்தான் தோற்றார்கள் என்று கூறுவது, அதுபோன்ற கதைப் போலிதான். இவ்வாறான கதைப் போலிகள், எந்தச் சரியான புரிதலையும் உருவாக்குவதில்லை. இதுபோன்ற கதைகளை நடப்பதற்கு முன்னரே கூறமுடியாது. அதனால் எந்தக் கணிப்பையும் முன்னரே தரமுடியாது. புலிகள் வெற்றி பெற்றிருந்தால், அதே மனிதர்கள் வேறு சில காரணங்களைக் காட்டி, இதனாலதான் வெற்றி பெற்றனர் என்று கூறுவார்கள். அதுபோன்ற வாதமும் தவறானதே!.

3. பத்திரிகையாளர் அனுபவம் மிக்கவர், அதனால் அவர் கூறுவது உண்மை என்று சிலர் நினைக்கலாம். ஆயிர வருடங்களாக மக்கள் அனுபவத்தில் பூமி தட்டை என்று உணர்ந்தார்கள். நமது பார்வைகள் நமக்குத் தெரியாமலேயே நம்மை ஏமாற்றும். மனித சமூகம், அரசியல், போர் என்பவை சிக்கலான விடயங்கள். இதை எளிதில் பார்த்து, புரிந்து கொள்ளலாம் என நினைத்தால், அது தவறான முடிவுகளிலேயே கொண்டு போய் சேர்க்கும். புலிகள் 30 ஆண்டுகளாகக் களத்தில் நின்றிருக்கிறார்கள், பல போர் வெற்றிகளைப் பெற்றிருக்கிறார்கள், பல பேச்சு வார்த்தைகளில் பங்கேற்றிருக்கிறார்கள். அவர்களுக்குத் தெரியாததைக் கண்டு பிடித்துவிட்டேன் என்பதற்கு, ஆழ்ந்த பலதுறைகளில் கற்றலும், அறிவும் தேவை.

மேலோட்டமாக ஒரு பத்திரிகையாளரால் முடியாத காரியம். எரிக்கு சோள்கைமும் அதுபோன்ற ஆய்வாளர் கிடையாது. அரசியல் என்பது போரிலிருந்து, பூலோக அரசியல் வரை, மனித உளவியலிருந்து பொருளாதாரம் வரை, ஒரு சமூகத்தின் அனைத்து துறைகளையும் இணைத்து உருவாக்கும் செயல்பாடு. அதற்கான அறிவு சாதாரண மனிதருக்கு இருப்பதில்லை. அதனால்தான் “ஒரு சிறந்த அரசன் என்பவன் ஒரு


HANDY SERVICE








Rheinische Str. 82, 44137
Dortmund, Germany
Phone: +49 163 9388808

அனைத்து தமிழ் தொலைக்காட்சிகளையும்
காண்பதற்கான அனைத்துவிதமான Boxகளும்
எம்மிடம் பெற்றுக் கொள்ளலாம்

தத்துவமேதையாக இருக்கவேண்டும்" என்கிறார் பிளேட்டோ. ஒரு ஆழ்ந்து கற்றறிந்த தத்துவமேதை இந்தந்தத் தவறுகளைப் புலிகள் செய்தார்கள் என்று கூறினால், அதிலிருந்து நாம் கற்றுக்கொள்ளலாம். அல்லது அதுபோன்ற மேதைகளின் கருத்துகளைப் பயன்படுத்தி, ஆய்வு செய்திருந்தாலும் பயனுள்ளதாக இருந்திருக்கும். ஆனால், இப்பத்திரிகையாளருக்கு அதுபோன்ற புலமை இருப்பதாகத் தெரியவில்லை. இன்னும் தான் செய்வது ஒரு கதைப்போலி என்பதுகூட அறியவில்லை.

சரி, இதுபோன்ற ஆய்வு முறையே தவறு என்றால், போரையும் அதன் முடிவுகளையும் எவ்வாறு புரிந்து கொள்வது? இதற்கு மாற்று என்பது தத்துவ அறிஞர்களால் ஏற்றுக்கொள்ளப்பட்ட அறிவியல், அரசியல் தத்துவங்களைக் கொண்டு ஆய்வதுதான் சரியாக இருக்கும். இனி இம்முறையைப் பின்பற்றி புலிகளின் முடிவுகளை ஆராய்வோம். இது நானறிந்த தத்துவங்கள் என்பதால், இது முடிவானது அல்ல.

## மறுவாழ்க்கைகள்
### *(Alternate Life Histories)*

"வாழ்க்கையில் ஒரு முடிவை எடுக்கிறோம் என்றால், அது நல்ல முடிவா? இல்லை கெட்ட முடிவா? என்பதை அம்முடிவின் விளைவை மட்டுமே வைத்து தீர்மானிப்பது தவறு" என்கிறார் நசீம் தலீபு. நாம் தீர்மானிக்க வேண்டிய முறை என்பது அதன் "மறுவாழ்க்கை" விளைவுகளை வைத்துதான்.

உதாரணமாக, ஒரு துப்புரவுத் தொழிலாளியையும், ஒரு மருத்துவரையும் எடுத்துக் கொள்வோம். துப்புரவுத் தொழிலாளி லாட்டரி டிக்கெட் வாங்குபவர். அவருக்கு லாட்டரி அடித்து பலகோடிகளுக்கு அதிபர் ஆகிறார். மருத்துவர் செய்வதைச் செய்துகொண்டு அப்படியே இருக்கிறார். இதிலிருந்து துப்புரவுத் தொழிலாளி சிறந்த முடிவை எடுத்தார் என்று கூறமுடியுமா? கண்டிப்பாக இல்லை. இங்குதான் மறுவாழ்க்கை தத்துவம் புரிதலை அளிக்கும். இந்த வாழ்க்கைச் சக்கரத்தை மீண்டும் ஆரம்பத்திலிருந்து பலதடவை சுற்றினால் என்னவாகும்? துப்புரவுத் தொழிலாளிக்கு ஒரே வாழ்க்கையில் மட்டுமே லாட்டரி அடித்திருக்கும், மற்ற வாழ்க்கையில் எல்லாம் அவர் தன்னிடம் இருந்த கொஞ்ச பணத்தையும் லாட்டரியில் சூதாடியே தொலைத்திருப்பார். மாறாக மருத்துவர், அனைத்து வாழ்க்கைகளிலும் அதே தொழிலை வெவ்வேறு இடங்களில் செய்து கொண்டிருப்பார். மருத்துவரின் முடிவுதான் சரியானது. (துப்புரவுத் தொழிலாளியாக இருப்பது தவறில்லை, சூதாடித் தொலைப்பதுதான் தவறு. இது தலீபு அளிக்கும் உதாரணம்)

இது தனிப்பட்ட வாழ்க்கைக்கு மட்டுமல்ல, அரசியலுக்கும் இது முக்கியமான தத்துவம். 2009 இனவழிப்பிற்குப்பின் பலர் புலிகளின் போராட்டத்தைக் குற்றம் சாட்டுகிறார்கள். இது விளைவை வைத்து குற்றம் கூறுவது. புலிகளைச் சரியாக எடை போட வேண்டுமென்றால் மறுவாழ்க்கைகளின் அடிப்படையில் செய்வதே சரியாக இருக்கும். புலிகள் இறையாண்மை உள்ள நாட்டை அடைவதற்காகப் போராடினார்கள். அதற்கு மிக அருகிலும் வந்தார்கள். இந்த வாழ்க்கைச் சக்கரத்தைப் பலமுறை முதலிலிருந்து சுழற்றினால் என்னவாகும், பாதிக்குப் பாதி வாழ்க்கைகளில் தனிநாடு கிடைத்திருக்கும். மீதி பாதியில் மீண்டும் சிங்களத்திற்கு அடிமையாக இருக்கவேண்டும். பல இயற்பியலாளர்கள் உண்மையிலே பல உலகங்கள் **(Multiple Universes)** நிகழ்தகவின் அடிப்படையில் இருக்கின்றன என்கிறார்கள். அது உண்மையென்றால், அதுபோன்ற உலகங்களில் பலவற்றில் புலிகள் வெற்றி பெற்று, தனிநாட்டை அமைத்திருப்பார்கள். அவ்வுலகில் பலர் புலிகள் எவ்வாறு சிறந்த முடிவை

எடுத்தார்கள்? என்று நேர்காணல் அளித்திருப்பார்கள்.

புலிகள் தோன்றிப் போராடாமலே இருந்திருந்தால் என்னவாகும்? எப்போதும் போலவே அனைத்து வாழ்க்கைகளிலும் அடிமைகளாக இருக்க வேண்டியதுதான். தனிநாட்டை நினைத்துக் கூட பார்க்கமுடியாது. அதைத்தான் திராவிடம் செய்தது. இனவழிப்பைத் தடுத்திருக்கலாம் என்று நினைக்கலாம். ஆனால், சிங்களம் புலிகளுக்கு முன்பிலிருந்து நம்மை அழித்துக் கொண்டுதான் இருக்கிறார்கள். அதனால் இது சிறந்த வாதம் அல்ல. சொல்லப்போனால் புலிகள் இருந்த வரைக்கும் இனவழிப்பு செய்வதற்கான தைரியம் சிங்களத்திற்கு இருந்ததில்லை.

மறுவாழ்க்கைகள் தத்துவ அடிப்படையில் புலிகளின் முடிவே சரியானது. மேலும் இந்த வாதங்கள் புலிகளின் போராட்ட வரலாறு, எது மாதிரியான நல்ல பின்விளைவுகளை உருவாக்கும்? என்பதை கணக்கில் கொள்ளவில்லை. அதையும் கணக்கில் கொண்டால், அது போராட்டத்திற்கான காரணங்களுக்கு மேலும் வலு சேர்க்கும்.

மனித மூளை என்பது, இயற்கையில் நிகழ்தகவின் வழியில் சிந்திப்பதில்லை. இவ்வுலகில் உறுதியானது என எதுவுமில்லை. அனைத்துமே நிகழ்தகவின் அடிப்படையில்தான் நடக்கிறது. அதுவும் போரை நிர்ணயிப்பது முடியாத காரியம். அதனால் நமது முடிவுகளும் மறுவாழ்க்கைகளில் ஏற்படும் விளைவுகளை ஆராய்ந்து, சிறந்த முடிவை எடுக்க வேண்டும். இத்தத்துவத்தின் அடிப்படையிலேயே எதிர்கால அரசியல் முடிவுகளும் எடுக்கப்பட வேண்டும். இதைத்தான் வள்ளுவன் இவ்வாறு கூறுகிறான்.

**“கான முயல்எய்த அம்பினில் யானை**
**பிழைத்தவேல் ஏந்தல் இனிது.”**

காட்டில் ஓடும் முயலை நோக்கிக் குறித் தவறாமல் எய்த அம்பை ஏந்துதலைவிட, வெட்டவெளியில் நின்ற யானை மேல் எறிந்து, தவறிய வேலை ஏந்துதல் சிறந்தது. (மணியரசன் ஐயா இதை பலமுறை கூறி கேட்டிருக்கிறேன்.)






இலட்சுமணன்

# இன அழிப்பைச் சரியென்று உரைக்கும் ரணில்

**நாட்டை ஆள்வது யார்? என்று தெரியா நிலைப்பாடு ஒன்று இலங்கையில் உருவாகி வருகிறது. "நாட்டின் ஜனாதிபதியை விரட்டுவோம், வரவு செலவுத் திட்டத்தைத் தோற்கடிப்போம்" என்று எதிர்க்கட்சிகள் கோசமிட்ட காலம் போய், ஆளும் தரப்பினரே கோசமெழுப்பி வருவது இதற்குச் சாட்சி.**

இந்நிலையில், "இலங்கை மற்றும் காசாவை மேற்குலகம் இருவேறு விதமாகக் கையாள்வது ஏன்?" என்ற இலங்கை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் கேள்வி, தற்போது பெரும் பேசுப் பொருளாக மாறியிருக்கிறது.

கடந்த நாடாளுமன்றத் தேர்தலில் தேசியப் பட்டியல் ஊடாக நாடாளுமன்ற உறுப்பினரான ரணில் விக்கிரமசிங்க, அரகலயவின் பயனாக ஜனாதிபதியானதும், அவர் செய்து முடித்த ஜனாதிபதி மாளிகை, பிரதமர் மாளிகை போன்ற அரச சொத்துகளைச் சேதப்படுத்தியவர்கள், அரகலய போராட்டத்தில் ஈடுபட்டவர்களைக் கைது செய்து, சட்ட நடவடிக்கைக்கு உட்படுத்திய விடயம், அமெரிக்கா உள்ளிட்ட மேற்குலக நாடுகளால் கேள்விக்குட்படுத்தப்பட்டது. அப்போது அவர் கொடுத்த பதில், அவருடைய அதிகாரத்தனத்தை வெளிப்படுத்தியிருந்தது. அப்படிப் பார்த்தால் அவருடைய இப்போதைய மேற்குலகத்தை நோக்கிய கேள்வி ஒன்றும் புதிதல்ல.

மேற்குலகின் நெருக்கமானவர். நெருக்கமானவர் என்பதனால் மேற்குலக நாடுகளின் கட்டளைகளுக்கு அல்லது கருத்துகளுக்குச் செவிசாய்ப்பார் என்றுதான் ஜனாதிபதியான ஆரம்பத்தில் அனேகமானோர் நினைத்துக் கொண்டார்கள். ஆனால், ஜனாதிபதி அதிகாரம் கிடைக்கப் பெற்ற பின்னர், அவர் முழுக்க முழுக்க ஒரு அதிகார வெறியராகவே மாறிவிட்டார் என்ற கருத்துகள் உருவாகியிருக்கின்றன. இந்த இடத்தில்தான் ரணிலினுடைய மேற்குலகின் பார்வை தொர்பான கருத்து ஆராயப்பட வேண்டியதாக மாறியிருக்கிறது. நாட்டின் பொருளாதார ரீதியான பிரச்சினை காரணமாக மேற்கொள்ளப்பட்ட அரகலய போராட்டமானது, மகிந்த குடும்பத்தின் கோத்தபாயவை, வீட்டுக்கு அனுப்பி, ரணிலை ஜனாதிபதியாக்கியதை மாத்திரமே

செய்திருக்கிறது. அது தவிர கட்டுப்பாடுகளையும், நெருக்கடிகளையும் கொண்டு வந்திருக்கிறது.

பொருளாதார நிலைப்பாடு மேலும் மோசமடைந்திருக்கிறது. புதிய கட்டுப்பாட்டுச் சட்டங்கள் கொண்டு வரப்படுகின்றன. குறிப்பாக பயங்கரவாதச் சட்டத்துக்குப் பதிலாக, பயங்கரவாத எதிர்ப்புச் சட்டம் கொண்டு வரப்படுகிறது. அதே போன்று மக்களை ஒன்று திரட்டும் கருத்துகளைச் சுதந்திரமாகப் பகிரக் கூடியதாக இருக்கின்ற சமூக ஊடகங்களின் வாயை முழுமையாக மூடி வைக்கக் கூடியதான நிகழ்நிலைக் காப்புச் சட்டம் கொண்டு வரப்படுகிறது. இவையெல்லாம் எந்தவிதமான அரசுக்கெதிரான செயற்பாடும் நடைபெறாத நிலையையே உருவாக்கவே மேற்கொள்ளப்படுகிறது என்பதில் சந்தேகமில்லை.

அதே நேரம், அண்மையில் தேசத்தின் மனநிலை என்ற தொனிப்பொருளில் மேற்கொள்ளப்பட்ட நாடு தழுவிய கருத்துக் கணிப்பொன்றில், இலங்கை அரசாங்கத்தின் மீதான நம்பிக்கை பாரிய அளவில் வீழ்ச்சியடைந்துள்ளது என்பதுடன், அது தொடர்ந்தும் வீழ்ச்சியடைந்து வருகிறது என்பது தெரியவந்துள்ளது. குறிப்பாக, ரணில் விக்ரமசிங்க தலைமையிலான அரசாங்கத்தின் மீது இலங்கையில் 10வீதத்துக்கும் குறைவானவர்களே நம்பிக்கை வைத்துள்ளதாகவும் தெரிய வந்துள்ளது. கொழும்பைத் தலைமையகமாகக் கொண்டு இயங்கும் வெரிட்டே ரிசர்ச் *(Verité Research)* அமைப்பினால், இம்மாதம் 6ஆம் திகதி வெளியிடப்பட்ட ஆய்விலேயே இத் தகவல் தெரியவந்துள்ளது.

அவர்களது ஆய்வின்படி, ரணில் விக்ரமசிங்க அரசாங்கத்தின் அங்கீகாரம் ஜூன் மாதத்தில் 21வீதமாக இருந்து, நவம்பரில் 9 வீதமாக குறைவடைந்துள்ளது. அதே போன்று அரசின் மீது மக்கள் கொண்டுள்ள திருப்தி, நான்கு மாதங்களில் 12 வீதத்தில் இருந்து, 6 வீதமாக குறைந்துள்ளது. பொருளாதார நம்பிக்கைக்கான சுட்டெண்ணும் 62இல் இருந்து 44 வீதமாக சரிந்துள்ளது என்று கண்டறியப்பட்டுள்ளது.

அரசாங்கத்தின் மீதான நம்பிக்கை பாரியளவில் வீழ்ச்சியடைந்து வரும் நிலையில், தொழிற்சங்கங்கள் உட்பட சமூகத்தின் அனைத்துப் பிரிவினரும் அதிகரித்த வரி காரணமாக, மிகுந்த சிரமங்களை எதிர்கொள்வதாக தொழிற்சங்கங்கள், தொழில் வல்லுனர்கள் உள்ளிட்ட அனைத்துத் தரப்பினரும் அரசாங்கத்தைக் கடுமையாக விமர்சித்து வருகின்றனர்.

பொருளாதாரம் சிக்கலான நிலையை நோக்கிச் சென்று கொண்டிருக்கிறது. பணவீக்கம் அதிகரித்து, வாழ்க்கைச் செலவீனங்கள் தாங்கிக்கொள்ள முடியாத அளவிற்கு உயர்ந்துள்ளது. பெரும் கவலை சூழ்ந்த மனநிலையுடனேயே மக்கள் ஒவ்வொரு நாளையும் கடத்தி வருகின்றனர்.



அதே நேரத்தில் தமிழர்களுக்கெதிரான நெருக்குதல்கள் பெரும்பான்மைச் சிங்களத் தரப்பினரால் வடக்கு, கிழக்கில் கட்டவிழ்த்து விடப்பட்டிருக்கின்றன.

இந்த நிலையில்தான் இஸ்ரேல் காசாவில் மேற்கொண்டு வருகின்ற தாக்குதல்களை நியாயப்படுத்துவது போன்றதொரு தோரணையில், இந்தக் கருத்தினை வெளிப்படுத்தியிருக்கிறார் ரணில் விக்கிரமசிங்க. ஒருவகையில் அவருடைய இவ்வாறான கருத்துகளுக்கு நாட்டை ஆண்ட ஏனைய தலைவர்கள் போன்று, இனவாதம் மற்றும் சிங்கள ஆதிக்கத்தினைக் கையிலெடுக்க வேண்டிய கட்டாயம் ஏற்பட்டிருப்பதாகவே கொள்ளமுடியும். அதாவது அவருக்கு வேறு வழியில்லை என்றே கொள்ள முடியும்.

பலஸ்தீனர்களின் விடுதலைப் போராட்டம் ஆரம்பிக்கப்பட்ட



காலங்களிலிருந்து, இன்றுவரை இஸ்ரேல் நடத்தி வருகின்ற கொடுமைகள் சொல்லில் அடங்காதவை. ஆனால், அது இன்னொரு நாடு மீதான தாக்குதலாகும். கடந்த மாதத்தில் பலஸ்தீனத்தின் ஹமாஸ் போராளிகள் இஸ்ரேல் மீது தாக்குதல் நடத்தத் தொடங்கியிருந்தனர். அதனையடுத்து இஸ்ரேல் நடத்திவரும் தாக்குதல்களினால் அண்ணளவாக 5ஆயிரம் சிறுவர்கள் பலியாகியிருக்கின்றனர்.

மேற்குலகின் பல நாடுகளும், அரபு நாடுகளும் தங்களது எதிர்ப்பை இஸ்ரேலுக்குத் தெரிவித்து வருகின்றனர். இங்கு யுத்தம் முடிவுக்குக் கொண்டு வரப்பட வேண்டும் என்றும் கோரி வருகின்றன. இதற்குள் இலங்கை அரசாங்கமும், தம்முடைய பங்கிற்கு நாடாளுமன்றத்தில் அவசர பிரேரணை ஒன்றைக் கொண்டுவந்து, யுத்தத்தினை நிறுத்த வேண்டும் என்ற கோரிக்கையினை முன்வைத்திருந்தது. அவ்வேளைகளில் இலங்கை அரசாங்கத்திற்கு இதற்கான தகுதி இருக்கிறதா? என்ற கேள்வியும் தமது நாட்டு மக்கள் மீதே தார்மீகப் பொறுப்பற்று தாக்குதல் நடத்தி, மனிதப் பேரவலத்தை ஏற்படுத்திய இலங்கை அரசாங்கம், எவ்வாறு இப்படியானதொரு கோரிக்கை முன்வைக்க முடியும்? என்ற கேள்வி தமிழ்த் தரப்பினால் வெளிப்படுத்தப் பட்டிருந்தது.

தமிழர்களுடைய விடுதலைப் போராட்டமானது வடக்கு, கிழக்கு மக்களுக்கான இன விடுதலைக்கான போராட்டமாகும். இப்போராட்டத்தின் ஆரம்பம் முதல், இன்றுவரை எந்த ஒரு அரச தலைவரும் மனச்சாட்சியுடன் அதனை ஏற்றுக் கொண்டதில்லை. ஏதோ ஒரு வகையில் காலங்கடத்தும் வகையிலும், அடக்குமுறையின் மூலமும் அதனை இல்லாதொழிக்கவே முயன்று வந்திருக்கின்றனர். அது முள்ளிவாய்க்கால் அவலத்துடன் முடிவுக்கு வந்தது.

இந்திய அரசாங்கம் வடக்கு, கிழக்கில் உருவாகிய விடுதலைப் போராட்ட அமைப்புகளுக்குப் பயிற்சியளித்து, உதவி வழங்கி, ஆதரவளித்து அவர்களை ஊக்கப்படுத்தியது. அது மாத்திரமல்லாமல், பூட்டான் தலைநகரில் திம்பு பேச்சுவார்த்தையை நடத்தி, பின்னர் இலங்கை இந்திய ஒப்பந்தத்தின் மூலமாக 13ஆவது திருத்தத்தினை இலங்கையில் உருவாக்கியிருந்தது. ஆனால், அதனால் உருவாகிய வட- கிழக்கு மாகாண சபையினை இலங்கை அரசாங்கம், சரியான முறையில் கையாளாத போது, கண்

முடியவராக இருந்தது. வட கிழக்கு மாகாண சபையின் முதலமைச்சர் தமிழீழத்தினைப் பிரகடனம் செய்த பின்பு, அவருக்கு இந்தியாவில் தஞ்சம் கொடுத்தது. அவ்வேளையில் தமிழீழ விடுதலைப் புலிகள் இலங்கை, இந்திய ஒப்பந்தத்தின் ஊடாக கொண்டுவரப்பட்ட 13ஆவது திருத்தம், வடகிழக்கு மாகாண சபை அலகு என்பவற்றினை எதிர்த்திருந்தனர்.

இந்திய அமைதி காக்கும் படை, இலங்கையின் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் நடத்திய கொடூரங்கள் காரணமாக, நாட்டைவிட்டு அவர்கள் வெளியேற வேண்டிய நிலை ஏற்பட்டது. அதன் பின்னர் ராஜீவ் காந்தி தமிழ் நாட்டில் படுகொலை செய்யப்பட்டார். இதனையடுத்து இலங்கைத் தமிழர்கள் மீதான, அவர்களுடைய அரசியல், இன விடுதலைப் போராட்டம் தொடர்பான நிலைப்பாடு மாற்றம் கண்டது என்று ஒரு வகையில் கொள்ளப்பட்டது. இருந்தாலும், இந்தியாவானது இலங்கையை தன் கைப்பிடியில் வைத்திருப்பதற்காகவே வட கிழக்கு விடுதலைப் போராட்டத்தைப் பயன்படுத்த முனைந்தது என்ற குற்றச்சாட்டும் இருந்து வருகிறது.

இதே போன்றதாகவே மேற்குலக நாடுகளும், தம்முடைய நலனை மாத்திரமே கருத்தில் கொண்டு செயற்பட்டுக் கொண்டிருக்கிறது. அதில் மாற்றங்கள் ஏற்படவில்லை என்பதே உண்மையாகும். அதற்கு நோர்வே அரசாங்கம் மேற்கொண்ட முயற்சிகளும், அதன் ஊடாக நடைபெற்ற விடயங்களும், அப்போதைய நோர்வே நாட்டு அமைச்சர் எரிக் சொல்கேய்மின் தற்போதைய ரணிலுடனான உறவும் நல்ல உதாரணங்களாகும்.

நாட்டின் ஜனாதிபதியாகப் பதவியேற்றது முதல், முழுச் சர்வாதிகாரத்துடன் செயற்படத் தொடங்கிய ரணில் விக்கிரமசிங்க, தன்னுடைய இன்னொரு முகத்தையும் காண்பிக்கத் தொடங்கினார். அதன் பின்னரான வெளிநாட்டுப் பயணங்கள், நேர்காணல்கள், சந்திப்புகள் அனைத்திலுமே அவர் சிங்களப் பேரினவாதிகளின் சிந்தனைக்கொப்பான கருத்துகளையே பகிர்ந்து வருகிறார். நாட்டை விட்டுக் கொடுக்காமலிருக்கிறேன் என்பதாக, அவர் அதற்குப் பதிலளித்தாலும் அது, மனித உரிமைகளை மதிக்காதத்தையே வெளிக்காட்டுவதாகவே கொள்ளமுடியும்.

இவ்வாறான நிலையில்தான் இப்போதைய ஹமாஸ்- இஸ்ரேல் யுத்தமானது, மீண்டுமொருமுறை ரணிலின் முகத்தை வெளிக்காட்டி நிற்கிறது. மாற்றமில்லா சிங்களத் தலைவர்களின் நடவடிக்கைகளிலிருந்து நாம் எதனைக் கற்றுக் கொண்டிருக்கிறோம்? அதற்கு மாற்றீடாக எதனை நிலைப்பாடாக மாற்றவிருக்கிறோம்? என்பதுதான் இப்போது தொக்கிநிற்கும் கேள்வி.




“இதில் வரும் பெயர்கள் அனைத்தும் உண்மையானவைகளே!. பலர் மாவீரர்களாகியமையாலும், விடயத்தின் உண்மைத் தன்மைக்காகவுமே இவ்வாறு எழுதுகிறேன்.”

துளசிச்செல்வன்.

மாம்பழம் அல்லது கோழி முட்டை கொண்டு வந்து சந்தையில் விற்றுவிட்டு, அந்தப் பணத்தில் கொப்பிப் பயிற்சி புத்தகங்கள் பலதடவை வாங்கி இருக்கிறேன்.

**சென்ற மாத தொடர்ச்சி...**

மாவீரர் தின சோடனைகள் பார்க்கவும், மாவீர நினைவஞ்சலி கூட்டங்களுக்கும், அக்கா, அண்ணா மற்றும் ஊரவர் உறவுகளுடன் நடந்தே வந்திருக்கிறேன். பூநகரியில் கூட்டுப்படை தலைமையகம் மீது நடாத்தபட்ட தவளை தாக்குதலில் வீர மரணமடைந்த 50ற்கும் மேற்பட்ட மாவீரர் வித்துடலைப் பார்க்க வந்ததும், அங்கே கதறியழுத பெற்றோரின் கண்ணீரில் கரைந்துபோனதும், இங்கே தான். அன்று அந்த அழுகை சுயநலத்தையே அதிகப்படுத்தியது. எனது அம்மா, சகோதரர் இப்படி தவிக்க விடக்கூடாது என நினைத்தேன்.

எனது அண்ணா, தம்பியை அழைத்து “பார்த்திங்களோ.. எப்பிடி குளறுதுகள்.. நீங்கள் யாரும் எந்தவேளையிலும் இயக்கத்திற்குப் போகக்கூடாது.. பிறகு எங்கட அம்மாவும் இப்பிடித்தான் குளறுவ..” என்றேன்.

உண்மையில் நான் அப்பிடியே இருந்தேன். சுயநலவாதி. எங்கள் உறவுகளிடையே நான் புத்திசாலி என்றும், வீட்டு பொறுப்புணர்வுள்ள பெடியன் என்றும் அபிப்ராயமிருந்தது. எனது பெற்றோர், எனது அண்ணன், தம்பி இயக்கத்திற்குப் போகாமல் இருக்க, என்னையே காவல் வைத்தனர்.

நான் மேலதிக வகுப்பு படித்த *ACS Accaday.* எனது பயிற்சி முகாமிற்குப் பக்கத்தில்தான் இருக்கிறது. நானிருக்குமிடத்திலிருந்து சில நூறு மீற்றர் தூரத்திற்க்குள் எனது அத்தை வீடு இருந்தது.

அத்தை, மாமா இருவருமே வைத்தியர்கள். சுன்னாகத்தில் நடராசா பரியாரியரை தெரியாதவர்கள் இல்லை. அவரின் மகன் தான் எனது மாமா. அவர்களிற்கு மூன்று பிள்ளைகள். அவர்களிடம் கார் இருந்தது. இரவோ,



# மெய்ப்பாதுகாவலன்

## (The bodyguard)

அதிகாலையிலோ ஐந்து நிமிடங்களிற்குள் அவர்களின் வீட்டிற்குச் சென்று விடலாம். அங்கிருந்து அவர்களின் காரில் எங்கள் வீட்டிற்குச் சென்று விடலாம். எல்லாம் ஒரு மணித்தியாலத்திற்குள் நடந்துவிடும். முகாமில் விடயமறிந்து தேட, முதலே நான் தலைமறைவாகலாம் என்று எண்ணத் தோன்றினாலும், மறுகணம் வேறொரு குரல் மேலெழும். வீணே போகும் உயிர், விடுதலைக்குப் போகட்டும். எனது குடும்பத்தார் அவர்கள் சந்ததி நன்றாக இருக்கட்டுமென்று நினைத்தேன்.

இயக்கத்தில் இணையமுன் சுயநல வட்டத்திற்குள் சுழன்றவன்தான். போராட போவது என்று முடிவு செய்த பின்னர், என்னை தன்நலன் கருதாத ஒருவனாக மாற்றவே முயன்றேன்.

எனவே பயிற்சி மற்றும் முகாமின் சூழல் என்னை சற்றுக் குழப்பினாலும், எனது உறுதியை நான் வலுப்படுத்த முயன்றேன். அங்கே போதிக்கும் உணர்ச்சி மிக்க கதைகளைக் கருத்தூன்றிக் கிரகித்தேன்.

**1995, ஜூலை 5, கரும்புலிகள் நாள்.**

மாணவனாக இருந்தபோது நினைவுக் கூட்டம், நினைவுப் பதாகை தாங்கிய ஊர்வலம் என்பதோடு முடிந்து விடும். கரும்புலி கப்டன் மில்லர் பற்றி வாசித்தும், கேட்டும் அறிந்திருக்கிறேன். ஒளி நாடாக்களில் சில கரும்புலி வீரருடைய பேச்சு கேட்டிருக்கிறேன். அதைவிட அந்த




அகரம்
விளம்பரத் தொடர்புகளுக்கு
00 49 176 47 11 87 11


நாளை நினைத்துப் பார்ப்பதில்லை. எனது மூத்த சகோதரர் அனைத்து கரும்புலி வீரர்களது படங்களையும் சேகரித்து வைத்திருந்தார்.

இந்தக் கரும்புலிகள் நாள், ஒரு பாசறையில் வருகிறது. வழமை போலல்லாது வித்தியாயமாக உணர்ந்தேன். மஞ்சள், சிகப்பு நிற அலங்காரத்துடன் சில மாவீரர் படங்களும், கரும்புலி வீரர்களது படங்களும் வைக்கப்பட்டிருந்தன.

இன்பன் மாஸ்ட்டர் வழமை போலல்லாது சீருடை அணிந்திருந்தார். ஒரு மோட்டர் சைக்கிள் வரும் சத்தம் கேட்டது. சில வினாடிகளிற்குள் பயிற்சித் திடலில் மாவீரர் நினைவு மண்டபத்தின் முன்னே ஒன்று கூடினோம்.

பச்சை நிற ஜீன்ஸ், பச்சை நிறத்தில் கருப்புப் புள்ளிகள் போட்ட ஷேட். ஒட்ட வெட்டிய தலைமுடி. மெல்லிய உயர்ந்த தோற்றம். இன்பன் மாஸ்ட்டர் ஒருவித பதட்டமுடன் ஆரம்பித்தார்.

“இன்று இரட்ணம் மாஸ்ட்டர் வந்துள்ளார். இவர் பயிற்சி கொடுத்த சிலர் கரும்புலியாகியுமுள்ளனர். கரும்புலி வீரர்களைப் பற்றி அவர் நினைவுரை செய்வார்.”

இரட்ணம் மாஸ்ட்டரின் தோற்றம், குரல் அவர் பேசிய தொனி.. அவரது தமிழ் உச்சரிப்பு எல்லாம் மிக விரைவிலேயே அனைவரையும் ஈர்த்தது. எந்த நிலையிலும் மாறாத, திடமான உன்னதமான போராளி



ஒருவரின் கருத்தைக் கேட்டுக் கொண்டிருக்கிறேன் என்று அன்று தெரியாது. ஒரு பயிற்சி ஆசிரியர் பேசுகிறார் என்ற எண்ணத்தோடு கேட்டுக் கொண்டிருந்தேன். அவரது பேச்சும், அவரை போலவே மிக எளிமையாக இருந்தது.

அவர் பல விடயங்களைப் பேசினார். அவர்கள் பயிற்சி முடித்து, கலந்து கொண்ட முதலாவது சண்டைப் பற்றி விபரித்தார். அந்த சண்டை ஒரு நத்தார் நாள், மாலை நிகழ்ந்ததாம். இயக்க வரலாறில் இழப்பு இல்லாது நிகழ்த்தப்பட்ட, பெரிய பதுங்கி தாக்குதல். பல லட்சம் ரூபாய் பெறுமதியான ஆயுதங்களை அள்ளி எடுத்தார்களாம். உயிரிழப்பு இல்லாமல், தாக்குதல் முடித்துத் தப்பியது பற்றி விபரிக்கும்போது, முள்ளந்தண்டு சற்று நிமிர்ந்து, 'ஜிவ்' என்று ஒரு உணர்வு உடம்பெல்லாம் பரவியது.

ஒரு மணித்தியாலத்திட்கு மேலாக அவர் பேசினாலும், ஆர்வம் குறையாமல் அனைவரும் அவரது பேச்சை உணர்வோடு உள்வாங்கினார்கள். அவரின் பேச்சின் நிறைவில், "உங்களுக்கு இந்தக் கரும்புலிகள் நாள் மட்டுமே இப்பிடி இருக்கும். இனிவரும் நினைவு நாட்களில், நீங்கள் நினைவு கொள்ள பல நண்பர்கள் இருப்பார்கள். அவர்களது தியாகம், உங்களைப் போராட்ட வழியில் இன்னும் வழிப்படுத்தும்" என்றார்.

உண்மையான போராளிகளின் வார்த்தைகள் சத்தியமே!. அவர் சொன்னதுபோல, அடுத்து வந்த கரும்புலிகள் நினைவு நாட்களை, நான் அழாமல் கடந்ததேயில்லை. இன்று வரை.

**தொடரும்..**




BCN TRAVELS (REISEBÜRO)
Consulting Network.ug
(Travels-Business-Worldwide)
உங்கள்
விமானப் பயணங்கள்
என்றும்
சிறப்பு விலையில்
International
Monye Transfers
Ria
Worldwide Money Transfer
sw small world
Money Transfer
SriLankan
Airlines
Emirates
QATAR
AIRWAYS القطرية
الاتحاد
ETIHAD
AIRWAYS
Rheinische str.72-
44137 Dortmund
0231-108 763 61
0163 871 43 69
Fax : 0231 1087 6362
bcntravels@hotmail.de
consultingnetwork@hotmail.de
இங்கிலாந்து UK
விசாக்களுக்குரிய
ஒழுங்குகள் செய்து தரப்படும்
Canada visa, India one year,
5 years, Visa Srilanka Visa
72 மணித்தியாலத்தில்
பெற்றுத் தரப்படும்
Bank : consulting Network. UG
Targo bank
IBAN DE90 30020900 5330 5840 82
BIC : CMCIDEDD




மனோ

# பழ.நெடுமாறனும், காசி ஆனந்தனும் காட்டிக் கொடுக்கிறார்களா?

## மாவீரர் நாள் விடை தருமா?



இருவரையும் அப்பழுக்கு இல்லாத உத்தமர்களாக, எல்லா ஊடகங்களும் ஒரே பல்லவியாகப் பாடித் துதிக்கின்றன. முதலாமவர் இந்திய காங்கிரஸ் என்கிற பெரும் ஆலமரத்தின் கீழ், ஞானம் பெற்ற முதலாவது இந்தியாவின் பிரதமராக, இந்திய அரசியலின் வெற்றி நாயகன், பண்டிதர் ஜவகர்லா நேருவின் அருந்தவப் புதல்வி இந்திரா காந்தியின் இரட்சகராக, இரத்தம் சிந்திய தியாக சீலர் என்ற பெருமை பெற்றவர்.

அதனால் அவருக்கு டில்லி கொடுத்த மதிப்பு, மரியாதை வெள்ளத்தால் பெரும் மனிதராக, புனிதராகப் போற்றப் படுகிறார். நேரு குடும்பத்தின அரசியல் பின்னணியைத் தெரிந்தவர்கள், நேருவின் பூர்வீகப் பரம்பரை, அவரது அரசியல் சாதனைகள், சதிகள், சூழ்ச்சிகள் பற்றிய ஏராளமான தகவல்களை இணையப் பதிவுகளாகவும், முகநூல் பதிவுகளாகவும் இன்றும் படித்தறிந்து கொள்ள முடியும்.

அப்படியான அரசியல் பின்னணியைக் கொண்ட நெடுமாறன் பிரபாகரனுக்குச் சில உதவிகளைச் செய்தார் என்பதற்கும் அப்பால், ஈழத் தமிழர் அரசியல் தொடர்பான எந்த ஒரு புரட்சிகரமான கருத்தையும் வெளியிடும் நபராக காணப்பட வில்லை.

காங்கிரஸ் கட்சியின் ஆட்சியில், ராஜீவ்காந்தி படுகொலையில் புலிகள் அநியாயமாகத் தொடர்பு

படுத்தப்பட்டார்கள் என்றோ, அதைச் சாட்டாக வைத்து சோனியா காந்தியும், அவர் மகள் பிரியங்கா காந்தியும், மிக வன்மமாக இந்திய அரசும், அரச இராணுவ பாதுகாப்புத் துறை அதிகாரிகளும் வெளிப் படையாகவே புலிகளின் சர்வதேச அமைதிப் பேச்சுகளை முறியடித்து, மீண்டும் போரைத் தொடங்கி, 2 இலட்சம் வரையான அப்பாவிப் பொது மக்களை இனப் படுகொலை செய்து, கொன்றழித்த பொழுதும் இந்த மாறன் இதுநாள்வரையில் வாய் திறந்து ஒரு ஆறுதல் வார்த்தை கூடப் பேசியதாக வரலாறே கிடையாது.

காசி ஆனந்தனோ, அமிர்த லிங்கத்தின் கையாளாகச் செயற்பட்டு, இராசதுரை அவர்களை எதிர்த்து, வடக்கு கிழக்கு மாகாணத் தமிழரின் அரசியல் ஒற்றுமையை, நிரந்தரமாகப் பிரிக்கும் சதியில் வெற்றி பெற்றத் தமிழினத் துரோகி. எப்படியோ புலிகள் இயக்கத்தில் புகுந்த இவரது வரலாற்றில், இந்திய புலனாய்வுத் துறையின் பங்கு இருப்பதை, இவரது இன்றைய நிலை உறுதி செய்வதாக உள்ளது.

"இப்பொழுது பிரபாகரன் வருகிறார், அவரை வரவேற்க இந்திய அரசுக்கு எல்லாரும் ஆதரவளிக்க வேண்டும்" என்கிறார். அவர் பேச்சில் துளியும் உண்மைத் தன்மை இருந்தால், அவரே சோனியா காந்தி மூலமாக தனது கோரிக்கையை வைக்க யார் தடுத்தார்கள்? இவர் காட்டும் சுட்டுவிரல் அடையாளம் யாரை மிரட்ட, எதற்காக?

'வேலிக்கு ஓணான் சாட்சி' சொல்வது போல், பல்லுப் பிடுங்கப்பட்ட நிலையில் இந்திய அரசின் சிறைக் கைதியாக உள்ள காசி ஆனந்தன், யாருக்காக, எதற்காகப் பக்கப் பாட்டு பாட வேண்டும்? இருவரும் முதலில் இந்திய அரசால் பயங்கரவாதிகளாகத் தடை செய்யப்பட்ட தமிழ் ஈழ விடுதலைப் புலிகள் அமைப்பின் தடையை நீக்க, இந்திய அரசை கேட்க வேண்டாமா ?

ராஜீவ் காந்தி கொலை வழக்கில் தண்டனைக் காலம் முடிந்த பின்னரும், விடுதலையான நபர்கள், தாம் விரும்பிய நாடுகளில், தமது உறவினருடன் வாழ விடாது, சிறப்பு முகாம் எனும் வதைமுகாமில் அடைத்து வைத்துத் துன்புறுத்தும் தி.மு.க. காங்கிரஸ் கூட்டாச்சியில், இவர்களால் தமிழருக்கு நீதி பெற்றுக் கொடுத்தப் பின்னர், இவர்கள் பேசினால் யாராலும் நம்ப முடியும்.

அப்படி எதனையும் செய்யாமல், கொல்லப்பட்டு விட்டார் எனப் பத்தாண்டுகளுக்கும் மேலாகப் பேசிக் கொண்டிருக்கும் தமிழ் இனத்தின் பகையாளிகள் இலங்கை, இந்திய அரசுகளுக்கு எமது தலைவர்களைப் பிடித்துக் கொடுக்கும் வேலையைச் செய்ய, இப்படி ஒரு நாடகத்தை இந்த இருவரும் ஆடுகிறார்கள் என்பதில் யாருக்கும் சந்தேகம் இருக்க முடியாது.

இத்தகையோர்கள் உள் நாட்டிலும், வெளி நாடுகளிலும் ஈழத் தமிழ் மக்களை இந்திய அரசின் நிரந்தர கொத்தடிமைகளாகச் செய்து விடும் அரசியலைப் பேசி வருகிறார்கள்.

இவர்கள் முதலில் படித்து தெரிந்த கொள்ள வேண்டிய விடயம், ஈழத் தமிழரின் தாயகமும், பூர்வீக வரலாற்றுப் பெருமைகளும், சங்கிலிய மன்னனும், பண்டார வன்னியனும் இவர்களைப் போல் காட்டிக் கொடுத்திருந்தால், ஈழத் தமிழினம் இன்றும் நிலைத்தப் பெருமையுடன் உலகமே கண்டு பொறாமை கொள்ளும் இனமாகத் திகழ முடியுமா?

கெட்டாலும், செட்டி செட்டிதான். கிழிஞ்சாலும் பட்டு பட்டேதான். இவர்கள் செட்டியும் அல்ல, பட்டும் இல்லாத கிழிந்த அழுக்குத் துணிகள்.

சபீனா சோமசுந்தரம்

# என்னுள் நானாக நீ

'ஒரு வழியா முடிச்சாச்சு..' என்று ஒரு பெருமூச்சோடு நிமிர்ந்து உட்கார்ந்தாள் அவள். கை விரல்களால் கழுத்தை அழுத்தியபடி, எதிரில் சுவரில் மாட்டப் பட்டிருந்த கடிகாரத்தை நிமிர்ந்து பார்த்தாள். அது 1.30 ஐ காட்டியது.

அவள் எழுதும், முதலாவது நீண்ட கதை அது. க்ரைம் தொடர் ஒன்றிற்காக வாராவாரம் அவள் எழுதிக் கொண்டிருக்கும் நெடுங்கதையில், அடுத்த வாரத்திற்கான பகுதியை எழுதி முடித்து, மெயிலில் அனுப்ப நள்ளிரவு 1.30 ஆகி விட்டிருந்தது.

வேலையை முடித்த திருப்தியோடு எழுந்து சென்று சோபாவில் விழுந்து படுத்தாள். அலுவலக வேலையுடன், இந்த எழுத்து வேலை என்று நாள் முழுவதும் ஏற்பட்ட களைப்பில் கண்கள் சொருகியது அவளுக்கு.

மெல்ல இமைகள் மூடியது. ஒரு கடினமான கை. ஆனால் மென்மையான ஸ்பரிஸத்தோடு அவளது கால்களை அழுத்தியது. வீட்டில் யாரும் இல்லை. அப்படி இருக்கையில் யார், எனது காலைப் பிடிப்பது? என்று திடுக்கிட்டு எழுந்து அமர்ந்தாள்.



எதிரில் அவன் அமர்ந்திருந்தான், அழகான மெல்லியப் புன்னகையோடு. பின்னால் திரும்பி கதவைப் பார்த்தாள், அது பூட்டியிருந்தது. ஜன்னல்கள்? அவையும் பூட்டி இருந்தது.

அப்படியென்றால் யார் இவன்? எப்படி உள்ளே வந்தான்?

பயத்தில் இதயம் நின்றுவிடும் போல் இருந்தது. வியர்த்துக் கொட்டியது.

எதிரில் அமர்ந்திருப்பவனைப் பார்த்தாள்.

ஐந்தரை அடிக்கும் சற்று கூடிய உயரம், நேர்த்தியாகக் கத்தரித்து விடப்பட்ட மீசையும், அளவாக கொஞ்சமாக சேவ் செய்யப்பட்ட தாடியும், அவனுக்கு அத்தனை அம்சமாக இருந்தது. கறுப்பு நிற ஸேட் அணிந்திருந்தான். கழுத்திற்குக் கீழே ஒரு பட்டனை மாத்திரம் திறந்து விட்டிருந்தான்.

'ச்சேக்.. யாருன்னே தெரியல.. இப்பிடி வழிஞ்சிட்டு, ரசிச்சட்டு இருக்கனே..! என்ன மானெங்கெட்ட மனசு நமக்கு..?' என்று தன்னைத்தானே மனதிற்குள் திட்டியபடி. 'க்க்கும்; ம்ம்..' எனத் தொண்டையைச் செருமிக்கொண்டு,

'யார் நீங்க..?' என்றாள். பயம் வேறு வந்து மனதிற்குள் ஒட்டிக்கொண்டது.

அவன் ஒன்றும் சொல்லவில்லை. புன்னகையோடு அவளைப் பார்த்தபடி அமர்ந்திருந்தான்.

'யார் இவன்? கதைக்க வராதோ..!' என்று மனதிற்குள் யோசித்தபடி, அப்பொழுதுதான் கவனித்தாள், அவன் இன்னும் அவளுடையக் கால்களைப் பற்றியபடியே அமர்ந்திருந்தது.

பயம் அதிகரித்தது. காலை விடுவிக்க முயன்று மெல்ல இழுத்தாள். அவன் இன்னும் மென்மையாகப் பற்றிப் பிடித்தான். அவளுக்கு இதயம் வேகமாக அடிக்கத் தொடங்கியது.

‘ஒரு வேளை பேயாக இருக்குமோ!’ என்ற நினைப்பு வர, குப்பென வேர்த்தது அவளுக்கு. இதயத் துடிப்பின் வேகம் இன்னும் அதிகமானது. மீண்டும் அவன் யாரென்று கேட்கலாம் என்றால், தொண்டை வரண்டு, பேச்சு வரவில்லை பயத்தில்.

‘ஐயோ.. கடவுளே.. பிள்ளையாரப்பா.. முருகா.. என்னை நீங்கதான் காப்பத்தனும்..’ என்று மனதிற்குள் ஓலமிட்டாள்.

‘பேசாம கண்ணை இறுக்கி மூடிட்டு, அப்பிடியே படுத்து தூங்கிடுவமா..?’ என்று நினைத்தாள்.

அந்நேரம் அவள் காதுகளில் விழுந்தது அவன் குரல்.

‘என்னை தெரியலயா..?’ என்ற அந்த கரிசனையான, கம்பீரமான குரலில் அவள் நெஞ்சில் நிறைந்திருந்த பயம் காணாமல் போனது.

ஆனாலும், அவன் யாரென்று தெரியவில்லை. யோசித்துப் பார்த்தாள். ஹீம்ம்ம்.. தெரியவேயில்லை, ஞாபகமேயில்லை.

‘சொறி.. தெரியலயே.. சொன்னீங்கன்னா.. கண்டுபிடிச்சிடுவன்..’ என்றாள் அவள்.

அவன் சிரித்தான், பதிலுக்கு ‘உன்னையல்லால் என்னை யாரறிவார்..’ என்றான் ஒரு ராகத்தோடு.

‘ஸ்ஸ்ஸப்பா.. சொல்லி தொலைடா..’ என்றிருந்தது அவளுக்கு.

‘ப்ளீஸ் எனக்கு தெரியல.. நீங்க சொல்லுங்களன்.. அதவிட நீங்க இங்க எப்பிடி வந்தீங்கன்னு, சொல்லுங்க முதல்ல..?’ என்றாள் அவள்.

‘என்னை யாரென்று நீ கேட்பது வேடிக்கையாக இருக்கிறது..’ என்று சொல்லிச் சிரித்துவிட்டு, மெல்ல அவள் முகத்தினருகே குனிந்தான்.

அவனுடைய சுவாசத்தின் வெப்பம், அவள் நாசியில் அடித்தது. சரெலென பின்னால் நகர்ந்து உட்கார்ந்தாள்.




அவள் கால்களைப் பற்றியிருந்த அவனது கைகளில் ஒன்று, அவள் நகர்ந்த அதே வேகத்தில் அவள் இடையை வளைத்து, அணைத்துப் பிடித்தது.

அவளால் நகரவும் முடியவில்லை, அவனது நெருக்கத்தை ஏற்றுக்கொள்ளவும் முடியவில்லை.

நிமிர்ந்து அவனது கண்களைப் பார்த்தாள். அதில் காதலும், ஆசையும் நிறைந்திருந்தது.

'நீ.. நீங்க.. யாரு..ன்னு.. சொல்லுங்களேன்..?' என்றாள் தடுமாறிபடி.

'உன் காதலன்.. அணுவணுவாய் நீ ரசித்து கொண்டாடும் உன் நாயகன்..' என்றான் அவன்.

'இது என்னடா புது கதையா இருக்கு.. நமக்கு அப்பிடி யாரும் சரி வராதே.. ம்ம்ம்..' என்று யோசித்தாள்.

அவன் தன்னுடைய ஒற்றை விரலால், அவள் தாடையைத் தொட்டு நிமிர்த்தி, 'புது கதை எல்லாம் இல்லை.. நீண்ட கதை இது..' என்றான்.

'ஐயோ.. இவன் மைண்ட் றீட் பண்ணுறானே..' என்று திகைத்தாள்.

'உன்னை என்றும் நானறிவேன்..' என்றான் அவன்.

'ஐயோ எனக்கு விசர்தான் வருது.. யார் நீங்க..?' என்று சற்று குரலை உயர்த்திக் கோபமாகக் கத்தினாள் அவள்.

அதற்கும் பதிலுக்குப் புன்னகைத்துவிட்டு "அவன் அழகன், அவன் பேச்சு அப்படி, அவன் நடை அப்படி இப்படி என்றெல்லாம் உவமைக் கொட்டி, ரசனை சொட்டச் சொட்ட எழுதி, என்னை படைத்தவள் நீதானே.. அப்போ இந்தக் கதாநாயகனின் நாயகி இல்லையா..?" என்றான் கண்களில் காதலோடு.

அவளுக்கு ஒன்றும் புரியவில்லை. 'என்ன சொல்கிறான் இவன்? நான் யாரை ரசித்தேன்?' கூட வேலை செய்பவர்கள், உறவினர்கள், தினந்தோறும் போக்குவரத்தில் சந்திப்பவர்கள், மாமா, அத்தை, மகன்கள் என்று தனக்குத் தெரிந்த எல்லா ஆண்களையும் பற்றி யோசித்தாள்.

'ஹீம்ம்ம்.. யாரையுமே ரசிக்கல. பின்ன வேற யாரு..?' என்று யோசிக்க, எங்கோ அவள் நினைவில் ஓர் பொறி தட்டியது.

அவனேதான். அவள் கதையில் வரும் அவளுடைய கதாநாயகன். அப்படியென்றால் இவன்? ஆனால் எப்படி? அது வெறும் கதை. அது கதையில் வரும் கதாபாத்திரம்.

அவள் விழிகள் ஆச்சரியமும், பயமும் ஒன்று சேர விரிந்தது. நிமிர்ந்து அவனை பார்த்தாள். கண்களால் அவனை அளந்தாள். ஆம்! அவனேதான். அந்த உயரம், அந்த அழகான தாடி, மீசை. கம்பீரமான குரல் எல்லாம் அவள் உருவாக்கியவைதான்.

அது எப்படி சாத்தியம்? எழுத்தில் உருவாக்கிய ஒரு உருவம், உயிர் பெற்று வருவது எப்படி சாத்தியம்? ஒரே குழப்பம்.

ஆனாலும், அவன் யாரென்று தெரிந்தப் பிறகு, அவனுடைய மூச்சின் வெப்பமும், இடையை வளைத்திருந்த கையின் அழுத்தமும் என்றும் தொடர்ந்தால் என்னவென்றிருந்தது அவளுக்கு.

'ஆனால்.. எப்பிடி இதெல்லாம்..? நான் ஜஸ்ட் எழுதின ஒரு விசயம், எப்பிடி உயிரோடு வர முடியும்..' என்றாள் குழப்பமாக.

'எனக்கு தெரியாது.. ஆனால் நீ தினமும் பல ஆண்களைக் கடந்து வருகிறாய்.. பல ஆண்களோடு நட்பு பாராட்டுகிறாய்.. ஆனால் உன் நினைவுகள் மட்டும் எப்போதும் என்னையே சுற்றி இருக்கிறதே..? அது ஏன்..?' என்றான் அவன் புருவங்களை உயர்த்தி, கேள்வியாய் அவளை பார்த்தபடி.

'ஆ.. அ.. அது வந்து.. நீங்க நான் எழுதுற கதைட ஹீரோ.. ஸோ.. அதனால எப்பவும் எப்பிடியெல்லாம் எழுதலாம்னு.. உங்கள பத்தியே நினைச்சிட்டு இருக்கன்.. இது ஒரு பிழையா..? இதில என்ன இருக்கு..?' என்றாள் அவள்.







இன்பம் பொங்கும்
தமிழர் திருநாள் நல்வாழ்த்துகள்
யேர்மன் நாட்டில் ஆடைகளின் ராணி நவநாகரீகத்தில் மகாராணி
Jasmine Silk House
2023ஆம் ஆண்டின் புதிய டிசைன்களில்,
சாரி வகைகள், பஞ்சாபி வகைகள்,
சிறுவர்களுக்கான ஆடை வகைகள்
மற்றும் அனைத்து கவறிங் நகைகளையும்
பெற்றுக் கொள்ளலாம்
Fester Str.50, 40882 Ratingen
Tel : 021 028 447 44
Mob. : 0173 1937 325
எமது நிறுவனம் திங்கள் முதல் சனிக்கிழமை வரை
காலை 10.00 முதல் மாலை 8.00 வரை திறக்கப்படும்

'இல்லை.. உனக்கு என் மீது காதல்..' என்றான் அவன்.

'லவ்வா..? நல்லா ஜோக் பண்ணுறீங்க.. நீங்க..!' என்று சொல்லிச் சிரித்தாள் அவள்.

'அப்படியென்றால் எனக்கு உன் மீது காதல்.. நான் உன்னை நேசிக்கிறேன்..' என்றான் அவன்.

அவளுடைய சிரிப்பு மறைந்தது. முகத்தில் கவலை குடிக்கொண்டது.

'நீங்க.. என்ன சொல்லுறீங்க..?' என்றவள், 'நான் நினைக்கிறன்.. இது கனவு என்டு..' என்றாள் உதட்டைச் சுழித்து யோசித்தபடி.

'கனவோ, நிஜமோ..! உன் நாயகன் நான்தான்..' என்றான்.

அவள் இயலாமையோடு அவனை பார்த்தாள்.

மீண்டும் மெல்லப் புன்னகைத்தான். இப்போது கூட எத்தனை அழகு அவன் புன்னகை.

'கண்ணை மூடு..' என்றான்.

அவள் ஏன்? என்பது போல் பாத்தாள்.

'மூடு..' என்றான்

அவள் கண்களை மூடினாள்.

'நீ உடைந்து போகையில் எல்லாம்.. நான் கூட இருப்பேன்.. நீண்ட நேரம் தூங்காமல் இருந்து, உடம்பைக் கெடுத்துக் கொள்ளாதே..!' என்று அவன் குரல், அவள் காதுகளில் ரகசியமாய் கேட்டது.

அவள் நாசியில் அடித்த வெப்பம், மெல்ல மெல்ல தணிந்தது. அவள் இடையில் இருந்த அழுத்தம் குறைந்தது. அவளது கால்கள் காற்றுபட்டுக் குளிரை உணர்ந்தது.

கண்ணை திறக்க மனமில்லை. எதிரில் அவன் இல்லை என்பதை உணர்ந்தபோது. அப்படியே கண்களை மூடியபடியே சோபாவில் விழுந்தாள். மூடியிருந்த கண்களினுள் இருந்து வழிந்த ஈரம், அவள் கன்னங்களில் பரவிக் காய்ந்தது. அப்படியே அசதியில் அயர்ந்து உறங்கிப் போனாள் அவள்.

**முற்றும்**



# Jaffna Stores

**Geschäftsführer : Herr Thayaharan Nadarajah**

அனைவருக்கும்
தமிழர் திருநாள்
நல்வாழ்த்துகள்

மொத்தமாகவும்,
சில்லறையாகவும்
NSR தயாரிப்புகளை
விற்பனை செய்ய
விரும்புவோர்
தொடர்புகொள்ளுங்கள்

25
ஆண்டுகளாக
உங்களோடு நாங்கள்...

ENESAR N.S.R. என்எஸ்ஆர்

தயாரிப்புகளின்
ஏக விநியோகஸ்தர்கள்

மண்மணம் மாறாத சுவைதரும்
தரமான என்.எஸ்.ஆர். தயாரிப்புகள்



ஆசியா, ஆப்பிரிக்கா, சீனா நாடுகளின் அனைத்து விதமான உணவுப் பொருட்களுடன் மரக்கறி வகைகள், மீன் வகைகள், இறைச்சி வகைகள் அனைத்தையும் தரமாகவும், மலிவாகவும் பெற்றுக் கொள்ள பீல்பெல்ட் நகரில் ஒரு மாபெரும் நிறுவனம்

www.jaffnastores.com
info@jaffnastores.de
Tel. - 0521 174794
Mobile - 01732807906

Feilenstraße 8
33602 Bielefeld





துளசிச்செல்வன்.

# வன்னியின் பாசறைப் பறவைகள்

அன்பு வாகனத்தை நிறுத்தி, இதுதான் இடம் என்று சொல்லியபடி, பின்புறக் கதவைத் திறந்தான். எனது பயணப் பொதிகளில் ஒன்றைத் தூக்கிக் கொண்டு நடந்தான்.

அவன் அழைத்துச் சென்ற இடம், பழைய காலக் கட்டட வேலைப்பாடுகளுடன் கூடியதொரு வீடு. படிக்கட்டுகளில் மேலேறிச் செல்ல வேண்டும்.

"கவனம் நிலம் வழுக்கும்" என்றுவிட்டு, எனது சப்பாத்துகளைக் கவனித்தான்.

"உது இஞ்ச தாங்காது. முதலில நீங்கள் நல்ல சப்பாத்தும் ***Jacket***ம் வாங்க வேணும்.."

நான் 'ம்' என்று சொல்லிக் கொண்டு படிகளில் ஏறினேன்.

"இடம் கொஞ்சம் அப்பிடியிப்பிடித்தானிருக்கும் சமாளியுங்கோ. நான் ஒருத்தனை இண்டைக்கு ஒருத்தனை ***Case*** க்கு கூட்டிக் கொண்டு போகவேணும், முடிய மதியமாகும். அப்பிடியே வேலை.."

அவன் சொல்லியபடி கதவைத் திறந்தான்.

கதவருகோடு ஏராளமான சப்பாத்துகள் ஒழுங்கற்றுக் கிடந்தன. இரவு ***Party*** ஏதாவது நடந்திருக்குப்போல என்று எனக்குள் எண்ணிக் கொண்டு, மறுபடி படிகளில் இறங்கி, காரில் மீதமிருந்த பொருட்களையும் எடுத்துக்கொண்டு மேலே வந்தேன்.

"இவர் வேந்தன், பழைய வேவுக்காரன். ஜெயம் அண்ணையின்ர ஆள்." அறிமுகப்படுத்தினான். கையிலும், கன்னத்திலும் விழுப்புண், தழும்புகளோடிருந்தவனை வன்னியில் பார்த்ததாய் நினைவிருந்தது.

"ரெண்டு வேலையும் முடிய, நான் நாளைக்குதான் வருவன். வந்து மிச்சத்தை

"கதைப்பம்." என்று என்னிடம் விடைபெற்றபடி, வேந்தனை அழைத்து,

"மச்சான் இவர் படுக்க ஒரு இடம் ஒழுங்கு செய்து குடு." சொல்லியபடி படிகளில் இறங்கினான். கார் விரைந்தது. நான் அவன் போன திசையைப் பார்த்துக் கொண்டிருந்தேன்.

"ஓய்வுறக்கமில்லாம உழைக்கிறான். இப்பவும் நாடு, மக்கள், போராளிகள் எண்டு நினைக்கிற ஆட்களில அன்புவும் ஒருத்தன்."

வேந்தன் தேநீர் குவளையோடு அருகில் நின்றான். ஆவி பறக்கும் தேநீர் சுவையாகவிருந்தது. வன்னியில் பாசறை வாழ்வை நினைவுபடுத்துவதாகவிருந்தது.

தேநீரை உறிஞ்சியபடி அந்த இருப்பிடத்தை அவதானிக்கிறேன். சிறு சமையல் கூடம், ஒரு மலசலகூடம், வரவேற்பறை, ஒரு படுக்கையறை. மிகவும் சிறியதாக ஒருவர் மட்டும் வசிக்கக்கூடிய அளவுடைய வீடு. அங்குமிங்குமாக ஏராளமான **Jackets** மற்றும் சப்பாத்துகளுமாயிருந்தன.

படுக்கையறையினுள் அடுக்கு கட்டிலில் ஏழுபேர்கள் படுத்திருந்தார்கள். சிலர் ஆழ்ந்த உறக்கத்திலும், சிலர் தொலைபேசியைப் பார்த்தபடியுமிருந்தனர். இன்னும் சிலர், நித்திரை விட்டெழுந்து, பரபரப்பாக வேலைக்குத் தயாராகிக் கொண்டுமிருந்தார்கள்.

புதிய முகங்களும், பழகிய முகங்களுமாகப் பலவகையானவர்களைச் சந்தித்தேன்.

"இப்ப கொஞ்ச நேரத்தில கனபேர் வேலைக்குப் போயிடுவினம். நீங்கள் அந்த இடத்தில படுக்கலாம்."

வேந்தன் சொல்லும்போதே எனக்குச் சூழ்நிலை புரிந்தது. ஒருவர் வெளியே போனால் தான் அங்கே இன்னொருவர் படுக்க இடம் கிடைக்கும்.

வரவேற்பறையில் இருந்த சொகுசு கதிரையிலிருந்தபடி, தொலைபேசியில் பலரைத் தொடர்பு கொண்டேன். நான் ஐரோப்பிய நாடொன்றில் இறங்கியதை, ஒரு பெரிய சாதனையைப் போல விபரித்துக் கொண்டிருந்தேன்.

இத்தோடு எல்லா கஸ்டமும் முடிவுக்கு வருகிறது. முதலில வந்த கடனைக் கட்டிப் போட வேணும் அதுக்குப் பிறகு மனைவி, பிள்ளைகளைக் கூப்பிட வேண்டும். இவை இரண்டையும் நிறைவேற்றிய பின்னர், மாவீரர்களிற்குப் பெரிய நினைவு மண்டபம் கட்டுறது போன்ற எண்ணங்களே மேலெழுந்து நின்றன.

யார் யாருடன், எவ்வளவு நேரம் கதைத்தேன்? என்ற கணக்கில்லாமல் தொலைபேசியில் புழுகியதில் நேரம் போனதே தெரியவில்லை.

"அண்ணை சாப்பிடுவம்." வேந்தன் அழைத்தான். சிறிய சமையல் கூடம் நேர்த்தியாகவும், சுத்தமாகவுமிருந்தது.

பாணும், பழைய இறைச்சி கறியும். சுவையாகவிருந்தது.

சாப்பிட்டுக் கொண்டிருக்கவே எங்களோடு இன்னொருவர் இணைந்து கொண்டார். அவரது முதற்பார்வையே அலட்சியமாகவிருந்தது.

அதிகம் பேசாத அவர், அன்புவின் தூரத்து உறவுக்காரர் என்று அறிமுகப்படுத்திக் கொண்டார்.

வன்னிக்கும், அவருக்கும் வெகுதூரம். உண்மைதான். அவர் 1990ஆம் ஆண்டுகளிற்குப் பின்னர் கொழும்பிலேயே வசித்தவர். போராட்டம் பற்றிய சரியான புரிதல் இல்லையென்பதை, அவரது ஓரிரு

வார்த்தைகள் மூலமாக உணர முடிந்தது.

கடைசித் துண்டு பாணை, நான் கறியில் தொட்டு வாயில் வைக்கவும்,

“நீங்கள் வன்னியில நின்டே வாறியள்.” என்றவாறு வார்த்தைகளில் கொக்கி போட்டார்.

“முள்ளிவாய்க்கால் முடிவு எங்கட சனத்திற்கு வந்திருக்க கூடாது..” அவர் தொடர்ந்து பேசினார்.

நான் ஆழமான பெருமூச்சொன்றுடன், “ஓம்! மறக்கமுடியாத துயரம் தான்” என்று கூறிக் கொண்டு கைகளைக் கழுவி, சமையலறையை விட்டு வெளியேறி, மீண்டும் வரவேற்பறையில் வந்தமர்ந்தேன்.

அவர் தேநீர் குவளையுடன் என்னைத் தொடர்ந்து வந்து, எனக்கு எதிர்ப்புறமாவிகவிருந்த இருக்கையில் அமர்ந்து கொண்டார்.

“வன்முறை வழியில போனால், எப்பவும் அழிவில்தான் முடியும்..”

அவரது தொனி என்னைச் சீண்டுவதாகவிருந்தது. ஆனாலும் நான் உள்ளே கொப்பளிக்கும் கோபத்தை வெளிக்காட்டாது மெல்லிய சிரிப்போடு,

“இல்லை. அப்பிடியில்லை, மென்முறையும் அமைதி வழியும் கூட அவலத்தையும், துயரத்தையுமே தந்திருக்கிறது எனச் சொல்லிவிட்டு, எனது தொலைபேசியைப் பார்த்தேன்.

***Viber*** இலும் ***Massnger*** இலும் நண்பர்கள் உறவுகளென்னறு பலரும் வாழ்த்து மழை பொழிந்திருந்தார்கள். அவர்களிற்குப் பதில் போடுவதில் கவனத்தைச் செலுத்தினேன்.

‘ஜெயிச்சிட்டம் மாறா..’ என்பதைப் போல ஒவ்வொரு செய்தியும் மிகவும் உற்சாகமாகப் பறந்தன.

**தொடரும்...**



Subash Purity of Taste

SM STAR High Quality Sea Food

Asiatischer Lebensmittelladen

# IMPORTAS

Cash & Carry

Elaiya PREMIUM TASTE



www.importas.ch
info@importas.ch

Baslerstrasse 102
8048 Zürich
Tel : 043 343 03 55
Fax : 043 343 03 56

Kranichweg 8
3074 Muri bei Bern
Tel : 031 951 24 44

Parkweg 2
4665 Offringen
Tel: 062 798 11 11
www.importasoftringen.ch

**உணவுப் பொருட்கள், மலிகைப் பொருட்கள், மரக்கறி வகைகள், பழ வகைகள் மற்றும் தரமான இறைச்சி, மீன், கணவாய் வகைகளை உடனுக்குடன் பெற்றுக்கொள்ள இன்றே நாடுங்கள்!**




## இன்பம் பொங்கும் தமிழர் திருநாள் நல்வாழ்த்துகள்

ELAKKIA · Rubicon EXOTIC · Maliban Inspiring Goodness · LEELA

Kings · TRS ASIAS FINEST FOODS · Niru · Aachi The Mother of Good Taste

சுவைமிகுந்த தாயக
உணவுகளை பெற்றுக்கொள்ள
நாடவேண்டிய இடம்

பாரதி, இலங்கை

# ஈழத் தமிழரை நேசித்த கறுப்பு எம்.ஜி.ஆர்!



ஈழத் தமிழர்களுக்காக உதவிய அவர்களை இதயப் பூர்வமாக நேசித்த தமிழகத்தின் முன்னணி அரசியல் ஆளுமைகளில் ஒருவரை தமிழினம் இழந்து விட்டது.

முன்னணி நடிகரும், தேசிய முற்போக்கு திராவிட கழகத்தின் தலைவருமான விஜயகாந்தின் மரணம், தமிழக அரசியலில் ஒரு வெற்றிடத்தை ஏற்படுத்தியுள்ளது. மறுபுறும் ஈழத் தமிழர்கள் மத்தியிலும் அதிர்ச்சியையும், சோகத்தையும் உருவாக்கியுள்ளது.

ஒரு நடிகராகவும், அரசியல்வாதியாகவும், சமூகப் போராளியாகவும் பல பரிமாணங்களை வெளிப்படுத்தியவர் விஜயகாந்த்.

குறுகிய காலத்துக்குள் அரசியலில் உச்சத்துக்கு வந்து, ஈழத் தமிழருக்கான போராட்டங்களிலும் கவனத்தைச் செலுத்திய விஜயகாந்த், தனது உடல் நலனில் அதிகளவு கவனத்தைச் செலுத்தியிருந்தால், தமிழகத்தின் தவிர்க்க முடியாத ஒரு சக்தியாக உருவாகியிருப்பார்.

ஜெயலலிதா, கருணாநிதி போன்ற பெரிய நட்சத்திர ஆளுமைகளின் செல்வாக்குக்குத்



தமிழக அரசியல் உச்சத்தில் இருந்த ஒரு காலகட்டத்தில், அரசியலில் குதித்து, எதிர்க்கட்சித் தலைவர் என்ற பதவியையும் பெற்றுக் கொண்ட அவர், தமிழக அரசியலில் மூன்றாவது சக்தியாக தன்னை உயர்த்திக் கொண்டிருந்தார்.

அரசியலில் விஜயகாந்த் உச்சத்துக்கு வருவார் என்ற எதிர்பார்ப்பு அப்போது தமிழர்கள் மத்தியில் மட்டுமன்றி, அவரை எதிர்த்த அரசியல் சக்திகள் மத்தியிலும் ஏற்பட்டிருந்தது. இரண்டு பிரதான திராவிடக் கட்சிகளுமே அவரது கடைக்கண் பார்வைக்காக - அவருடன் கூட்டணி அமைப்பதற்காக ஏங்கிய ஒரு காலம் இருந்தது.

அதற்கு அடுத்த கட்டத்தை நோக்கியும் அவர் நகர்ந்திருக்கலாம். ஆனால், அவர் உருவாக்கிக் கொண்ட அரசியல் கூட்டணிகளும், அவரது உடல் நிலையும், அந்த உச்சத்தைத் தொடுவதற்குத் தடையாக இருந்து விட்டது.

1984இல் ஈழத்தமிழர் படுகொலையைக் கண்டித்து உண்ணாவிரதத்தில் ஈடுபட்ட விஜயகாந்த், ஆளுநரைச் சந்தித்து மனு அளித்தார். 1986ஆம் ஆண்டிலும் ஈழத் தமிழர் விவகாரம் தொடர்பாக, சென்னையில் விஜயகாந்தும், அவரது ரசிகர் மன்றத்தினரும் தமிழகம் முழுவதும் உண்ணாவிரதம் இருந்தனர். அப்போது, அவர் அரசியலில் பிரவேசித்திருக்கவில்லை. ஒரு நடிகராகவே இவ்வளவையும் அவர் மேற்கொண்டார்.

எம்.ஜி.ஆர் அளவுக்கு செய்யா விட்டாலும்கூட, ஈழத் தமிழர்களின் விடுதலையை உணர்வும் உயிருமாய் உளப்பூர்வமாய் ஆதரித்தவர் விஜயகாந்த். அவரது நூறாவது படத்துக்குப் பெயர் “கப்டன் பிரபாகரன்”. அந்தப் படத்தில் நடித்த பின்னர்தான் “கப்டன்“ என்ற என்ற அடைமொழி அவரது பெயருக்கு முன்பாக நிரந்தரமாக ஒட்டிக்கொண்டது என்பது கவனிக்கப்பட வேண்டிய விடயம். இந்தப் படம் 275 நாள்களைத் தாண்டி, தமிழக திரையரங்குகளில் ஓடி ஒரு சாதனையை நிலைநாட்டியது.

தனது மூத்த மகனுக்கு விஜய் பிரபாகரன் என்று பெயர் சூட்டியவர் விஜயகாந்த். ஈழத் தமிழர்களின் விடுதலைப் போராட்டத்தில் மீது அவருக்கு இருந்த ஈடுபாடு மற்றும் பற்றுதலின் காரணமாகவே இதனை அவர் செய்திருந்தார்.

ராஜீவ் காந்தி கொல்லப்பட்டு, இரண்டு வருடங்களின் பின்னர்தான் விஜய் பிரபாகரன் பிறந்தார். ஈழத் தமிழர்களுடன் தமது ஈடுபாட்டை வெளிப்படுத்துவதற்கே தமிழக அரசியல் சக்திகள் அச்சமடைந்திருந்த ஒரு காலத்தில், பிரபாகரன் என்ற பெயரை அவர் தனது மகனுக்குத் துணிச்சலுடன் சூட்டினார்.

ஈழத் தமிழர்களுக்காகத் தனது பிறந்த நாள் கொண்டாட்டத்தையும் விஜயகாந்த தவிர்த்தார். “ஈழத் தமிழர்கள் தவிக்கும் ஒரு காலத்தில் நான் எப்படி கேக் வெட்டி பிறந்நாளைக் கொண்டாடுவது?” என்ற கேள்வியையும் அவர் எழுப்பியிருந்தார்.

சென்னையில், ஈழத் தமிழ்ப் போராளிகள் நிதி சேகரிப்பில் ஈடுபட்டிருந்த



போது, அப்போது ஓடிக் கொண்டிருந்த அவரது திரைப்படம் ஒன்றின் ஒரு நாள் வசூலை, முழுமையாக அப்படியே அவர்களிடம் அவர் கொடுத்தார்.

அதேவேளையில், புலம்பெயர்ந்த மக்களை இலக்காகக் கொண்டு தனது திரைப்படங்களை அவர் தயாரித்து வெளியிடவும் இல்லை.

அதேவேளையில் வெறுமனே விளம்பரங்களுக்காகவோ அல்லது தமது அரசியலுக்காகவோ ஈழத் தமிழர் பிரச்சினையை அவர் பயன்படுத்தியவரல்ல.

ரசிகர் மன்றங்கள் மூலமாக அரசியலில் பிரவேசித்து, தனக்கென தனியான ஒரு பாதையை வகுத்துக்கொண்ட அவர், ஆரம்பத்தில் இருந்தே தேர்தல் கூட்டணிகள் எதனையும் அமைத்துக் கொள்வதை விரும்பவில்லை. தேர்தல் காலங்களில் இது தொடர்பாக வேள்வி எழுப்பப்படும் போது, "மக்களுடன்தான் நான் கூட்டணி. எந்தக் கட்சிகளுடனும் கூட்டணி அமைக்கப் போவதில்லை" என்பதில் அவர் உறுதியாக இருந்தார்.

கட்சி தொடங்கிய ஓராண்டிலேயே 2006இல் நடைபெற்ற சட்டப்பேரவைத் தேர்தலில் தனித்து 232 தொகுதிகளிலும் வேட்பாளர்களை நிறுத்தினார். தனது சொந்த ஊரான மதுரையில் விஜயகாந்த் போட்டியிடுவார் என அனைவரும் எதிர்பார்த்த நிலையில், பாமகவின் கோட்டையாகக் கருதப்பட்ட விருத்தாசலம் தொகுதியில் போட்டியிட்டார். கட்சியின் அனைத்து வேட்பாளர்களும் தோல்வியடைந்த நிலையில், விஜயகாந்த் மட்டும் வெற்றி பெற்றார்.

ஆனாலும், அந்த தேர்தலில் தேமுதிக 8.4 சதவீத வாக்குகளைப் பெற்று, அரசியல் கட்சிகளைத் திரும்பிப் பார்க்க வைத்தது. தொடர்ந்து பெரிய அளவில் வெற்றி பெறா விட்டாலும் 10 சதவீத வாக்குகளைப் பெற்றிருந்த நிலையில், 2011 தேர்தலில் விஜயகாந்துடன் கூட்டணி அமைக்க கருணாநிதி, ஜெயலலிதா இருவருமே விரும்பினர். யாருக்கும் பிடிகொடுக்காமல் இருந்த விஜயகாந்த், கடைசி நேரத்தில் ஜெயலலிதாவைச் சந்தித்து பரபரப்பை ஏற்படுத்தினார்.

2011 தேர்தலில் ஜெயலலிதா ஆட்சியைப் பிடிக்க தே.மு.தி.க உதவியது. அந்த தேர்தலில் தே.மு.தி.க 29 இடங்களில் வென்று, விஜயகாந்த் எதிர்கட்சித் தலைவரானார். திமுக முதல் தடவையாக 3ஆவது இடத்துக்குத் தள்ளப்பட்டது.

பின்னர் நடைபெற்ற அரசியல் நிகழ்வுகள் விஜயகாந்த்துக்குச் சரிவை ஏற்படுத்தத் தொடங்கின. அவர் நம்பிய சிலர் உள்பட ஏராளமான எம்.எல்.ஏக்கள் அதிமுக ஆதரவு நிலைப்பாட்டை எடுத்து, விஜயகாந்துக்கு எதிராகத் திரும்பினர். அதுவே விஜயகாந்துக்கு மனஉளைச்சலை ஏற்படுத்தி, அவரது உடல்நலக் குறைவுக்கு முக்கியக் காரணமாக அமைந்ததாக சொல்லப்பட்டது.

ஜெயலலிதாவுடனான அரசியல் கூட்டணியைக் குறுகிய காலத்திலேயே விஜயகாந்த் முறித்துக் கொண்டார். விடுதலைப் புலிகள் மற்றும் ஈழத் தமிழர்கள் தொடர்பாக ஜெயலலிதா கொண்டிருந்த நிலைப்பாடும் இவ்வாறு கூட்டணியை முறித்துக் கொண்டு விஜயகாந்த் வெளியேறுவதற்கான காரணிகளில் செல்வாக்கைச் செலுத்தியிருக்கலாம்.

அதன் பின்னர் பா.ஜ.க.வுடன் அவர் கூட்டணி அமைத்தார். மக்களுடன்தான் கூட்டணி என முழுங்கியவர், பின்னர் அரசியல் காரணங்களுக்காக இவ்வாறான கூட்டணிகளை அமைத்துக் கொண்டது அவரது தனித்துவத்தை மட்டுமன்றி, அவரது அரசியலையும் பாதித்தது.

தமிழக மக்கள் மத்தியில் அவர் மீதான அபிமானம் எந்தளவுக்கு உள்ளது என்பதை, வெள்ளிக்கிழமை அவரது இறுதிச் சடங்கிற்கு அலைகடலாகத் திரண்ட கூட்டம் வெளிப்படுத்தியது.




**2024 Summer**

# ab979€

CENTURY
TRAVELS

**CENTURY TRAVELS UK**

No: 85 Leybourne Road,
Middlesex, UB10 9HE
United Kingdom

+44 7955643464

**CENTURY TRAVELS GERMANY**

Rheinische Str.29
44137 Dortmund

0231 58 96 557
0231 55 74 319
+49 176 21682149

www.centurytravels.de

info@centurytravels.de

20 ETR ஆம் ஆண்டில்

24/7

ஜெர்மனியின் முதல் 24மணி நேர தமிழ் வானொலி

நேரடி நிகழ்ச்சிகளில் பங்குபெற அழையுங்கள்

004923118970200

Radio - by - Phone

ETR

ஐரோப்பிய தமிழ் வானொலி



அழையுங்கள்! வானொலியைக் கேட்டு மகிழுங்கள்..!!

00 4934 5483411998

தொலைபேசி இலக்கத்தில்

ஐரோப்பியத் தமிழ் வானொலி

மேலதீக விபரங்களுக்கு... www.etr.fm

மகிழ்வுடன்.... அகரம் | அகர தீபம் | ETR NEWS | ETR Music